18.08.2015

தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

### வெங்காயம் இறக்குமதிக்கு மீண்டும் 'டெண்டர்'

புதுடில்லி: பாகிஸ்தான், சீனா, எகிப்து ஆகிய நாடுகளில் இருந்து, 10 ஆயிரம் டன் வெங்காயத்தை இறக்குமதி செய்ய, தேசிய வேளாண் கூட்டுறவு சந்தைப்படுத்துதல் கூட்டமைப்பான, 'நாபெட்' மீண்டும் ஒப்பந்த புள்ளி கோரியுள்ளது. இதனால், உள்நாட்டில் அதிகரித்துள்ள வெங்காய விலையைக் குறைக்க மத்திய அரசு முயற்சித்துள்ளது.

வெங்காயம் இறக்குமதி செய்ய விரும்பும் நிறுவனங்கள், 27ம் தேதிக்குள் பூர்த்தி செய்யப்பட்ட ஒப்பந்த புள்ளிகளை வழங்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. "ஏற்கனவே வெளியிடப்பட்ட ஒப்பந்த புள்ளியில், எந்த நிறுவனமும் பங்கேற்காததால், மீண்டும் ஒப்பந்த புள்ளி, கோரப்பட்டுள்ளது," என, மத்திய வேளாண் துறை செயலர், சிராஜ் உசேன் தெரிவித்துள்ளார்.

வெங்காயம் அதிகம் விளையும், மகாராஷ்டிரா, கர்நாடகா, மத்திய பிரதேசம் ஆகிய மூன்று மாநிலங்களில், உற்பத்தி குறைந்துள்ளது. இதனால், வெங்காயம் விலை, கிலோ 60 ரூபாய்க்கும் அதிகமாக உயர்ந்துள்ளது. இறக்குமதி செய்யப்படும் வெங்காயம் மூலம், அதன் விலை உயர்வை கட்டுப்படுத்த, மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

கடந்த, ஜூலையுடன் முடிவடைந்த, வேளாண் பருவத்தில், நாட்டின் வெங்காயம் உற்பத்தி, 1.89 கோடி டன்னாகக் குறைந்துள்ளது. இது, முந்தைய பருவத்தில், 1.94 கோடி டன்னாக இருந்தது. தற்போது, நாபெட் கிடங்குகளில், 30 லட்சம் டன் வெங்காயம் இருப்பில் உள்ளது.

### தேன் உற்பத்தியை அதிகரிக்க மத்திய அரசு உதவி செய்யுமா?

மிழகத்தில், 10 ஆண்டுகளுக்குப் பின், அதிகபட்சமாக, 90 டன் தேன் உற்பத்தி செய்யப்பட்டு உள்ளது. இதை இருமடங்கு ஆக்குவதற்கான, புதிய திட்டத்தை செயல்படுத்த, மத்திய அரசின் உதவியை, கதர் வாரியம் எதிர்பார்த்து உள்ளது.

கன்னியாகுமரி மாவட்டம் மார்த்தாண்டம், அதை சுற்றியுள்ள கிராமங்களில், தேனீ வளர்ப்பு தொழிலில், 2,000 தொழில் முனைவோரும், 10 ஆயிரம் தொழிலாளர்களும் ஈடுபட்டு உள்ளனர்.

விவசாயத்துடன், தேனீ வளர்க்க பயிற்சி அளித்தும், தேனீ வளர்ப்பு பெட்டிகள் வழங்கியும், கதர் கிராமத்தொழில் ஆணையம் ஊக்குவிப்பதால், தேன் உற்பத்தி அதிகரித்து உள்ளது.

இதுகுறித்து, துறை அதிகாரிகள் கூறியதாவது:

தமிழகத்தின் குமரி மாவட்டத்தில், அதிகளவில் தேன் உற்பத்தி நடக்கிறது. வாரிய முயற்சியால், 10 ஆண்டுகளில் எப்போதும் இல்லாத வகையில், கடந்த நிதியாண்டில், 90 டன் தேன் உற்பத்தி செய்யப்பட்டு, 1.70 கோடி ரூபாய்க்கு விற்கப்பட்டு உள்ளது. காதிகிராப்ட் மையங்களில் கிடைக்கும் தேன், 100 சதவீதம் சுத்தமானது; 'அக்மார்க்' முத்திரை

பெற்றது. தேன் உற்பத்தியை அதிகரிக்கும் வகையில், உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த, தேன்கூடு பெட்டிகள், உற்பத்தி உபகரணங்களை, 10 கோடி ரூபாயில் வழங்க, வாரியம் திட்டமிட்டு உள்ளது. இதை செயல்படுத்த, மத்திய அரசிடம் நிதியுதவி கோரப்பட்டு உள்ளது. இவ்வாறு, அதிகாரிகள் கூறினர்.

### தென் மாவட்டங்களில் பரவலாக நல்ல மழை

மதுரை: மதுரை மாவட்டத்தில் நேற்று முன் தினம் பரவலாக மழை பெய்தது. அதிகபட்சமாக மேட்டுப்பட்டியில் 76.02 மி.மீ., குறைந்தபட்சமாக பெரியாறு அணை நீர்ப்பிடிப்பு பகுதியில் 6.02 மி.மீ., மழை பதிவானது.கோடை மழையுடன் துவங்கிய கத்திரி வெயில் (மே 4 - மே 29) மழையுடன் முடிந்தது. ஜூன் இறுதி வரை மழை பெய்ததால் அணைகளில் நீர் மட்டம் உயர்ந்தது. ஜூலையில் மழை பெய்யாததால் அணைகளின் நீர் மட்டம் குறைந்தது. மதுரையில் பேரணை முதல் கள்ளந்திரி வரை முதல் போக சாகுபடிக்காக வைகை அணையில் இருந்து ஜூலையில் தண்ணீர் திறந்து விடப்பட்டது. அணையில் நீர் மட்டமும் குறைந்து வருகிறது.

தென்மேற்கு பருவமழை துவங்காத நிலையில் மதுரை, திண்டுக்கல், தேனியில் நேற்று முன்தினம் மாலை கன மழை கொட்டியது. விடிய, விடிய தூரல் நிற்கவில்லை. மதுரையில் அதிகபட்சமாக மேட்டுப்பட்டியில் 76.02 மி.மீ., மழை பெய்தது. மழையளவு (மி.மீ.,): பெரியாறு அணை 6.02, தேக்கடி 5.08, கூடலூர் 10, சண்முகாநதி 8, உத்தமபாளையம் 10.04, வீரபாண்டி 20, வைகை 10.06, மஞ்சளாறு 35, மருதாநதி 50, சோத்துப்பாறை 16, பேரணை 35.02, ஆண்டிபட்டி 48, மதுரை நகர் 56.04, மேட்டுப்பட்டி 76.02, சண்முகாநதி 45, சிட்டம்பட்டி

50, புளிப்பட்டி 45.04, மேலூர் 36.05, தனியாமங்கலம் 32, இடையபட்டி 70.04, விரகனுார் 47.06, கொடைக்கானல் 16.06 என மழை பதிவானது.

அணைகளின் நீர் வரத்து:

பெரியாறு அணைக்கு நீர் வரத்து 700 கனஅடியாக உள்ளது. வெளியேற்றம் 494 கனஅடி. வைகை வரத்து 460 கனஅடி. வெளியேற்றம் 960. சோத்துப்பாறை வரத்து இல்லை. வெளியேற்றம் 3. மஞ்சளாறு, சண்முகாநதி, மருதாநதி அணைகளில் வரத்து, வெளியேற்றம் இல்லை. சாத்தையாறு வரத்து இல்லை. வெளியேற்றம் 3 கன அடி என இருந்தது.

அணைகள் நீர்மட்டம்

(நேற்றைய நிலவரம்)

பெரியாறு: 118 அடி

(மொத்த உயரம் 152)

வைகை: 49.05 (71.07)

சோத்துப்பாறை: 99.54 (126)

மஞ்சளாறு: 47.85 (70)

சண்முகாநதி: 28 (52)

மருதாநதி: 54.75 (64)

சாத்தையாறு: 13 (29)

**விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

திருவள்ளூர்: திருவள்ளுர் மாவட்ட விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டம், வரும் 21ம் தேதி, நடைபெற உள்ளது.

திருவள்ளூர் மாவட்ட விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம், வரும் 21ம் தேதி, பகல் 11:00 மணியளவில், மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில், நடைபெற உள்ளது.

ஆட்சியர் வீரராகவ ராவ் தலைமையில் நடைபெற உள்ள இக்கூட்டத்தில், மாவட்டத்தில் உள்ள வேளாண்மை, தோட்டக்கலை, வருவாய், மின்வாரியம், கூட்டுறவு, பொதுப்பணி, வேளாண் பொறியியல், வேளாண் விற்பனை, மீன்வளம், கால்நடை பராமரிப்பு மற்றும் வணிகம் மற்றும் இதர வேளாண் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டு, விவசாயிகளின் குறைகளுக்கு தீர்வு காண உள்ளனர். எனவே, மாவட்டத்தில் உள்ள விவசாயிகள், இக்கூட்டத்தில் கலந்து கொண்டு பயன்பெறுமாறு, மாவட்ட ஆட்சியர் கேட்டுக் கொண்டு உள்ளார்.

## மேட்டூர் நீர்வரத்து அதிகரிப்பு: நீர்மட்டம் தொடர்ந்து சரிவு

மேட்டூர்: மேட்டூர் அணை நீர்வரத்து நேற்று, வினாடிக்கு, 10 ஆயிரத்து, 141 கனஅடியாக அதிகரித்த போதிலும், நீர்மட்டம் தொடர்ந்து சரிந்து வருகிறது. கடந்த, 9ம் தேதி மேட்டூர் அணை நீர்மட்டம், 96.510 அடியாகவும், நீர் இருப்பு, 60.411 டி.எம்.சி.,யாகவும் அதிகரித்தது. பின், நீர்வரத்து குறைந்ததாலும், டெல்டா பாசனத்துக்கு வினாடிக்கு, 13 ஆயிரம் கனஅடி நீர், தொடர்ந்து வெளியேறுவதால், மேட்டூர் அணை நீர்மட்டம் சரிய துவங்கியது. கடந்த சில நாட்களாக, கபினி, கே.ஆர்.எஸ்., அணைகளில் இருந்து, கரையோர பாசனத்துக்காக, காவிரியாற்றில் நீர்திறக்கப்பட்டது. இந்த நீரின் ஒரு பகுதி,

தொடர்ச்சியாக மேட்டூர் அணைக்கு வருகிறது. இதனால், நேற்று முன்தினம், 8,255 கனஅடியாக இருந்த நீர்வரத்து நேற்று வினாடிக்கு, 10 ஆயிரத்து, 144 கனஅடியாக அதிகரித்தது. இந்நிலையில், நேற்று, கபினி, கே.ஆர்.எஸ்.ல் வினாடிக்கு, 15 ஆயிரம் கனஅடி நீர் வெளியேற்றப்பட்டது. இதனால், வரும் நாளில் மேட்டூர் அணை நீர்வரத்து சற்று அதிகரிக்கும். எனினும், டெல்டா பாசனத்துக்காக மேட்டூர் அணையில் இருந்து வினாடிக்கு, 13 ஆயிரம் கனஅடி நீர் வெளியேற்றுவதால், நேற்று அணை நீர்மட்டம், 91.400 அடியாக சரிந்தது. நீர்வரத்து அதிகரித்த போதிலும், நீர்வரத்தை விட நீர் வெளியேற்றம் கூடுதலாக இருப்பதால், மேட்டூர் அணை நீர்மட்டம் தொடர்ந்து சரிந்து வருகிறது. கடந்த, ஒன்பது நாளில் நீர்மட்டம், ஐந்து அடி சரிந்துள்ளது.

## ரூ.16 லட்சத்துக்கு பருத்தி வர்த்தகம்

ராசிபுரம்: அக்கரைப்பட்டி தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கியில் நடந்த ஏலத்தில், 1,033 பருத்தி மூட்டை, 16 லட்சம் ரூபாய்க்கு விற்பனையானது. ராசிபுரம் வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்துக்கு உட்பட்ட அக்கரைப்பட்டி தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கி வளாகத்தில், வாரம் தோறும் திங்கட்கிழமை பருத்தி ஏலம் நடக்கிறது. நேற்று நடந்த ஏலத்துக்கு, ஆர்.சி.எம்.எஸ்., மேலாண் இயக்குனர் எழிலரசி தலைமை வகித்தார். சங்கத் தலைவர் தாமோதரன், வங்கித் தலைவர் ரவிச்சந்திரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். பல்வேறு பகுதிகளை சேர்ந்த விவசாயிகள், தங்கள் விளை நிலத்தில் சாகுபடி செய்த பருத்தியை அறுவடை செய்து, 60 கிலோ கொண்ட மூட்டையாக கொண்டு, 1,033 சுரபி ரகம் மூட்டைகள் ஏலத்தில் குவிக்கப்பட்டது. அதில், சுரபி ரகம் அதிக பட்சம், 6,162க்கும், குறைந்த

பட்சம், 4,747 ரூபாய்க்கும் ஏலம் போனது. மின்னக்கல், நாச்சிப்பட்டி, மதியம்பட்டி, அக்கரைப்பட்டி, மாமுண்டி, தொட்டிப்பட்டி, கருங்கல்பட்டி, பாலமேடு, கோட்டப்பாளையம் மற்றும் சுற்று வட்டாரத்தை சேர்ந்த, 50க்கும் மேற்பட்ட விவசாயிகள் பங்கேற்றனர். திருச்செங்கோடு, மகுடஞ்சாவடி, கொங்கணாபுரம், சேலம், ஆத்தூர், பொள்ளாச்சி, கோவை ஆகிய பகுதிகளை சேர்ந்த வியாபாரிகள் கலந்து கொண்டு ஏலம் எடுத்தனர். 1,033 மூட்டை பருத்தி, 16 லட்சம் ரூபாய்க்கு ஏலம் போனது.

### முட்டை விலை 322 காசாக நிர்ணயம்

நாமக்கல்: தமிழகம் மற்றும் கேரளாவில், முட்டை கொள்முதல் விலை, 322 காசாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. நாமக்கல்லில், தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு கூட்டம், நேற்று, நடந்தது. முட்டை உற்பத்தி, மார்க்கெட் நிலவரம் குறித்து பண்ணையாளர் விவாதித்தனர். அதையடுத்து, முட்டை கொள்முதல் விலையில், 342 காசுகளுக்கு விற்பனை செய்யப்பட்ட முட்டை, 20 காசு குறைத்து, 322 காசாக நிர்ணயம் செய்யப்பட்டது. நாட்டின் பிற மண்டலங்களில் முட்டை விலை (காசுகளில்) நிலவரம்: சென்னை, 322, ஹைதராபாத், 305, விஜயவாடா, 300, பர்வாலா, 290, மும்பை, 345, மைசூர், 357, பெங்களூரு, 350, கொல்கத்தா, 340, டில்லி, 315. இவ்வாறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. நாமக்கல்லில், நேற்று, நடந்த பண்ணையாளர், வியாபாரிகள் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், முட்டைக் கோழி விலையை மாற்றம் செய்யாமல், அதே விலை, கிலோ 67 ரூபாய் நிர்ணயிக்கப்பட்டது. பல்லடத்தில், நடந்த கறிக்கோழி உற்பத்தியாளர் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், கிலோ, 67 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்ட கறிக்கோழி விலையை, எட்டு ரூபாய் உயர்த்தி, கிலோ, 75 ரூபாயாக நிர்ணயம் செய்யப்பட்டது.

## மாவட்டத்தில் 2வது நாளாக மழை: பாலக்கோட்டில் 107.30 மி.மீ., பதிவு

தர்மபுரி: தர்மபுரி மாவட்டத்தில் தொடர்ந்து, இரண்டாவது நாளாக மழை பெய்ததுடன். பாலக்கோடு, காரிமங்கலம் பகுதியில் அதிகளவு மழை பெய்தது.

தர்மபுரி மாவட்டத்தில், கடந்த, இரண்டு நாட்களாக, தொடர்ந்து மழை பெய்து வருவதால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். குறிப்பாக, நேற்று முன்தினம் இரவு முதல், நேற்று அதிகாலை வரை, மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் கனமழை பெய்தது. இதனால், ஆனி பட்டம் இன்று (ஆக., 18) துவங்குவதையடுத்து விவசாயிகள், நேற்று, மானாவாரி பயிர்களான, கேழ்வரகு, சாமை, கம்பு, சோளம், பருத்தி உள்ளிட்ட விதைகளை, தர்மபுரி, நல்லம்பள்ளி, காரிமங்கலம், பாலக்கோடு, பென்னாகரம், அரூர், பாப்பிரெட்டிப்பட்டி உள்ளிட்ட பகுதிகளில் உள்ள சிறுதானிய கடைகள் மற்றும் உரக்கடைகளில், விதைகளை வாங்கி சென்றனர். மேலும், மாவட்டத்தில் தொடர்ந்து பெய்த மழையின் காரணமாக, ஏராளமான விவசாயிகள், விதைகளை நடவு செய்ய, நேற்று மறு உழவில் ஈடுபட்டனர். இதே போல், பாசன விவசாயிகளும், நெல், கரும்பு உள்ளிட்ட பயிர்களை, ஆனி பட்டத்தில், நடவு செய்ய, விவசாய நிலங்களை தயார் படுத்தினர். நேற்று மதியம் வரை வெயில் வாட்டி வந்த போதும், மாலை, 3 மணிக்கு மேல், வானில் கருமேகங்கள் காணப்பட்டதுடன், குளுமையான சீதோஷன நிலையும் ஏற்பட்டது. நேற்று காலை நிலவரப்படி, மாவட்டத்தில், அதிகபட்சமாக, பாலக்கோட்டில், 107.30 மில்லி மீட்டர் மழை பதிவானது. தொடர்ந்து, ஒகேனக்கல், 93.60 மி.மீ., மாரண்டஹள்ளி, 69 மி.மீ., பென்னாகரம், 20 மி.மீ., தர்மபுரி, 11மி.மீ., அரூர், 5.30 மி.மீ., கலெக்டர் அலுவலகம், 4 மி.மீ., மழையளவு பதிவானது குறிப்பிடத்தக்கது. தர்மபுரி மாவட்டத்தில், கடந்த, ஓராண்டில் பதிவான மழையளவில், நேற்று முன்தினம்,

பாலக்கோடு பகுதியில் பெய்த, 107.30 மில்லி மீட்டர் மழையளவு அதிகம் என்பது குறிப்பிடத்தக்கது.

## தென்பெண்ணை ஆறு பகுதியில் கன மழை: கே.ஆர்.பி., அணைக்கு நீர்வரத்து அதிகரிப்பு

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி மாவட்டத்தில், தென்பெண்ணை ஆற்று நீர்பிடிப்பு பகுதியில் பெய்துவரும் தொடர் கனமழையால், கே.ஆர்.பி., அணைக்கு நீர் வரத்து அதிகரித்துள்ளது. தென்பெண்ணை ஆறு மூலம், கிருஷ்ணகிரி மாவட்டத்தில், கெலவரப்பள்ளி, கே.ஆர்.பி., அணைகளில், தண்ணீர் தேக்கி வைக்கப்படுகிறது. கே.ஆர்.பி., அணையில் தேக்கி வைக்கப்படும் தண்ணீரை கொண்டு, 10 ஆயிரம் ஏக்கருக்கு மேல், நெல் சாகுபடி செய்யப்படுகிறது. இந்தாண்டு, தென்பெண்ணை ஆறு நீர் பிடிப்பு பகுதியில் பெய்த கன மழையால், உரிய நேரத்தில் அணைக்கு நீர் வரத்து அதிகரித்து, அணையின் மொத்த நீர்மட்டமான, 52 அடியில், 50 அடி தண்ணீர் தேங்கியது. இதையடுத்து, ஜூலை இறுதி வாரத்தில், முதல்போக சாகுபடிக்கு, இடது மற்றும் வலதுபுற கால்வாயில், வினாடிக்கு, 160 கன அடிநீர் திறந்து விடப்பட்டது. இதனால் அணையில் நீர் மட்டம் குறைய தொடங்கியது. இந்நிலையில், கடந்த, இரண்டு நாட்களாக, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தொடர் மழை பெய்து வருகிறது. குறிப்பாக, தென்பெண்ணை ஆற்று நீர்பிடிப்பு பகுதியில் கனமழை பெய்து வருகிறது. இதனால், அணைக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. நேற்று காலை நிலவரப்படி, தளியில் அதிகபட்சமாக, 100 மில்லி மீட்டர் மழை பதிவாகியுள்ளது. தொடர்ந்து, தென்பெண்ணை ஆற்று நீர்பிடிப்பு பகுதியான ராயக்கோட்டையில், 59 மி.மீ., தேன்கனிக்கோட்டை, 44 மி.மீ., சூளகிரி, 42 மி.மீ., ஓசூர், 28 மி.மீ., கிருஷ்ணகிரி, 26.2 மி.மீ., மழை பதிவாகி உள்ளது. மேலும், மாவட்டத்தில் நெடுங்கல், 21.6 மி.மீ.,

ஊத்தங்கரை, 19 மி.மீ., போச்சம்பள்ளி, 15.4 மி.மீ., பாரூர், 11.8 மி.மீ., பெனுகொண்டாபுரம், 9.3 மி.மீ., அஞ்செட்டி, 6.3 மி.மீ., என, மழை பதிவாகியுள்ளது. கடந்த, 12ம் தேதி, கே.ஆர்.பி., அணைக்கு வினாடிக்கு, 70 கன அடிநீர் மட்டுமே வந்தது. இது படிப்படியாக அதிகரித்து, நேற்று காலை நிலவரப்படி அணைக்கு, 453 கன அடிநீர் வந்து கொண்டுள்ளது. அணையின் நீர்மட்டம், 46.70 அடியாக உள்ளது.

பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் சாம்ராஜ் கூறுகையில், ""தென்பெண்ணை ஆற்றின் நீர்பிடிப்பு பகுதியில், மேலும் கன மழை பெய்ய வாய்ப்புள்ளதால், அணைக்கு நீர்வரத்து அதிகரிக்கும்; இதனால், 24 மணி நேரமும் அணைக்கு வரும் நீரின் அளவை கண்காணித்து வருகிறோம்," என்றார்.

## சாம்பல் நோய் தாக்குதல் எதிரொலி: ஓசூர் வெற்றிலைக்கு கூடுதல் விலை

ஓசூர்: ஓசூர் மற்றும் தேன்கனிக்கோட்டை தாலுகாவில், வெற்றிலையில் சாம்பல் நோய் தாக்குதல் அதிகரித்து வருவதால், சாகுபடி குறைந்துள்ளது. இதனால் கடந்த வாரத்தை விட, கூடுதல் விலைக்கு வெற்றிலை விற்பனையானது.

ஓசூர், கெலமங்கலம், அஞ்செட்டி, தேன்கனிக்கோட்டை, தளி, ராயக்கோட்டை உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில், 10 ஹெக்டேர் பரப்பளவில் வெற்றிலை சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. மேலும் அகத்தி, முருங்கை, வாழை போன்றவற்றிற்கு ஊடு பயிராகவும் வெற்றிலை பயிரிடப்படுகிறது. நாற்பது நாட்களுக்கு, ஒரு முறை கொடியில் இருந்து பறிக்கப்படும் ஓசூர் வெற்றிலைக்கு தனி மவுசு இருப்பதால், தஞ்சாவூர், சென்னை, ஈரோடு போன்ற நகரங்களுக்கு அனுப்பப்பட்டு வருகிறது. ஆண்டுக்கு, ஒரு ஹெக்டேரில், ஒரு கோடி

வெற்றிலை இலைகள் கிடைக்கிறது. இந்நிலையில், ஓசூர் மற்றும் தேன்கனிக்கோட்டை தாலுகாவில், வெற்றிலையில் சாம்பல் நோய் தாக்குதல் அதிகரித்துள்ளதால், சாகுபடி குறைந்துள்ளது. எனவே, வெற்றிலைக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால், கூடுதல் விலை கிடைத்து வருகிறது.

ஓசூரை அடுத்த, கெலமங்கலம் விவசாயி சிவப்பிரகாஷ் கூறியதாவது: ஓசூர், தேன்கனிக்கோட்டை தாலுகாவில் கடந்த, ஆண்டு ஆகஸ்ட் மாதம் சாரல் மழை பெய்தது. இதனால் வெற்றிலையில் சாம்பல் நோய் தாக்குதல் இல்லை. இந்த ஆண்டு மழை பெய்யாததால், வெற்றிலையில் சாம்பல் நோய் தாக்குதல் ஏற்பட்டுள்ளது. மேலும் கடந்த ஜூன் மாத துவக்கத்தில் இருந்து காற்று அதிகளவில் வீசியதால் வெற்றிலை சாகுபடியும் குறைந்து விட்டது. இந்த காலக்கட்டத்தில், சாம்பல் நோய் தாக்குதலும் அதிகளவில் உள்ளது. வெற்றிலைக்கு தேவை அதிகமாக உள்ள நிலையில் சாகுபடி குறைந்துள்ளதால், விலை உயர்ந்து வருகிறது. ஒரு கட்டு வெற்றிலை தற்போது, 70 ரூபாய்க்கும், 120 கட்டு கொண்ட, ஒரு மூட்டை வெற்றிலை, 8,400 ரூபாய்க்கும் விற்கப்படுகிறது. இதே கடந்த வாரம், ஒரு மூட்டை வெற்றிலை, 4,500 வரை மட்டுமே விற்பனையானது. ஆனால், கடந்த ஆண்டு வெற்றிலை உற்பத்தி அதிகமாக இருந்ததால், ஒரு கட்டு, 50 ரூபாய் வரை மட்டுமே விற்பனையானது. வெற்றிலையை பொறுத்தவரை பராமரிப்பு அவசியம். கொடி படர தேவையான அடிப்படை வசதிகளை செய்து கொடுத்தால் தான், அதிக வெற்றிலை இலைகள் கிடைக்கும். வெயில் அதிகம் படாமல் இருக்க, வாழை, அகத்தி, உள்ளிட்ட கீரை வகைகள் மற்றும் மரங்களை நட வேண்டும். அப்போது தான் வெற்றிலை ஈரத்தன்மையுடன் இருக்கும். இவ்வாறு, அவர் கூறினார்.

## திருச்சியில் தொடர் மழை

திருச்சி: திருச்சியில் தொடர்ந்து கடந்த, மூன்று நாட்களாக மழை பெய்து வருவதால், மக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். திருச்சியில் பகலில் வெயில் கொளுத்தும் நிலையில், தொடர்நது மூன்று நாட்களாக இரவில் மழை பெய்து வருகிறது. இதனால், குளிர்ந்த சீதோஷ்ணநிலை உருவாகியுள்ளதால், மக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். லால்குடியில், 29 மி.மீ., புள்ளம்பாடி, 31.40, திருச்சி விமான நிலையத்தில், 48.20, திருச்சி டவுன், 22, கல்லக்குடி, 70.40, சமயபுரம், 28, துவாக்குடி, 98, மழை பதிவாகியுள்ளது.

## விலை மலிவாக இருந்தாலும் கத்தரி, வெண்டை வாங்க தயக்கம்

மானாமதுரை: மானாமதுரையில் வெண்டை, அவரை,கத்தரி போன்ற காய்கறிகளை மக்கள் அதிகம் வாங்காமல் புறக்கணிப்பதால் பயிரிட்ட விவசாயிகள் தவித்து வருகின்றனர். மானாமதுரை அருகே தஞ்சாக்கூர்,வெள்ளிக்குறிச்சி,கரிசல்குளம், மாரநாடு உள்ளிட்ட பகுதிகளில் வெண்டைக்காய்,அவரைக்காய்,கத்தரிக்காய் போன்ற நாட்டு காய்கறிகள் அதிகளவு பயிரிடப்படுகிறது.போதிய மழையில்லாததால் கண்மாய் கரையோரம் உள்ள விவசாயிகள் காய்கறி சாகுபடியில் ஈடுபட்டு வருகின்றனர். காய்கறிகளை விவசாயிகள் பெரும்பாலும் திருப்புவனம்,திருப்பாச்சேத்தி, மானாமதுரை ஆகிய ஊர்களில் நடைபெறும் வாரச்சந்தைகளில் விற்பனை செய்வதுண்டு.

சமீப காலமாக நாட்டு காய்கறிகளை மக்கள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவதில்லை. கத்தரிக்காய், வெண்டைக்காய் கிலோ 40 ரூபாய் என விற்பனை செய்து வந்த நிலையில் கடந்த வாரம் மானாமதுரை சந்தையில் கிலோ பத்து ரூபாய்க்கு விற்பனை செய்தும் யாரும் வாங்க ஆர்வம் காட்டவில்லை. கத்தரிக்காய்,வெண்டைக்காய்,அவரைக்காய்,புடலங்காய் போன்ற காய்கறிகள் கிலோ பத்து ரூபாய்க்கு சந்தையில் விற்பனை செய்யப்பட்டன.விவசாயி லட்சுமி கூறுகையில்,"வெள்ளிக்குறிச்சி

கத்தரிக்காய் என்றால் மிகவும் பிரபலம். கிலோ 60ரூபாய் வரை விற்பனை செய்தோம். தற்போது வாங்க ஆளில்லை. கடலோர பகுதிகளான சாயல்குடி, ராமேஸ்வரம்,ராமநாதபுரம் போன்ற பகுதிகளுக்கு வேனில் ஏற்றி சென்று விற்பனை செய்து வருகிறோம். வேன் வாடகை,ஏற்றி, இறக்க கூலி போன்றவற்றால் விலை கட்டுபடியாக வில்லை, 'என்றார்.வியாபாரி சந்திரன் கூறுகையில்: கடந்த ஒரு வருடமாகவே நாட்டு காய்கறிகள் போதிய விலை கிடைக்கவில்லை.கேரளாவில் காய்கறிகளில் பூச்சி மருந்து அதிகளவில் உள்ளது என்ற தகவல் வந்ததில் இருந்தே இங்குள்ள மக்களும் நாட்டு காய்கறிகளை வாங்குவதில் ஆர்வம் காட்டவில்லை, வியாபாரிகளான நாங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளோம், என்றார்.

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**தில்லியில் வெங்காயம் விலை கடும் உயர்வு**

வரத்துக் குறைவு காரணமாக, தில்லியில் வெங்காயம் விலை திங்கள்கிழமை கடுமையாக உயர்ந்தது. சில்லறை விற்பனை கடைகளில், தரத்துக்கு ஏற்ப ஒரு கிலோ வெங்காயம் ரூ.70 முதல் ரூ.80 வரை விற்பனை செய்யப்படுகிறது.

இதுதொடர்பாக, ஆஸாத்பூர் வேளாண் பொருள்கள் விற்பனை குழுவின் உறுப்பினர் ராஜேந்திர சர்மா கூறியதாவது:

ஆஸாத்பூர் மொத்த விலை சந்தையில், ஒரு கிலோ வெங்காயத்தின் விலை ரூ.48ஆக உயர்ந்துள்ளது. வரத்து குறைவு காரணமாக, இன்னும் சில வாரங்களுக்கு வெங்காயத்தின் விலையில் மேலும் ஏற்றம் இருக்கும்.

வெங்காயத்தை அதிகளவில் உற்பத்தி செய்யும் மகாராஷ்டிரம், ராஜஸ்தான், குஜராத், மத்தியப் பிரதேசம், கர்நாடகம் ஆகிய மாநிலங்களில் வெங்காயம் இருப்பு இருந்தாலும், மந்தமான விநியோகம் காரணமாக மொத்த விலை அதிகரித்துள்ளது.

உதாரணமாக, ஆசியாவின் மிகப்பெரிய சந்தையாக கருதப்படும் மகாராஷ்டிராவின் லாசல்கௌன் சந்தையில், ஒரு கிலோ வெங்காயம் ரூ.43ஆக அதிகரித்துள்ளது. இந்த விலையே, நிகழாண்டில் அதிகமான விலையாகும்.

மொத்த விலை உயர்வால், சில்லறை விலையும் கணிசமாக உயர்ந்துள்ளது என்று சர்மா கூறினார். தில்லியில் காளி பாரி கோயில் அருகே காய்கறி வியாபாரம் செய்து வரும் முன்டு என்பவர் கூறியதாவது:

கடந்த வாரம் வரை, வெங்காயம் கிலோவுக்கு ரூ.50 முதல் ரூ.60 வரை விலை வைத்து விற்றேன். ஆனால், இன்று ரூ.70 முதல் ரூ.80 வரை தரத்துக்கேற்ப விலை வைத்து விற்கிறேன். கடந்த இரு நாள்களாக வெங்காய மொத்த விலை கணிசமாக அதிகரித்துள்ளது.

ஆஸாத்பூர் மண்டியில், ஒரு கிலோ ரூ.65 என்ற விலையில் வெங்காயத்தை வாங்கி வந்தேன். அதில், ரூ.10 லாபம் வைத்து விற்கிறேன் என்று முன்டு கூறினார்.

இதேபோல, தில்லி மற்றும் தேசிய தலைநகர் வலயப் பகுதிகளிலும் வெங்காய விலை அதிகரித்துள்ளது.

இதனிடையே, தில்லி அரசு சார்பில் நகரின் 280 மையங்களில் ஒரு கிலோ வெங்காயம் ரூ.30 என்ற மானிய விலையில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. தேசிய வேளாண் கூட்டுறவு அமைப்பானது, 2,500 டன்

வெங்காயத்தை தில்லி அரசுக்கு விநியோகித்துள்ளது என்று தில்லி அரசு வட்டாரங்கள் தெரிவித்தன.

**உள் மாவட்டங்களில் இன்று மழைக்கு வாய்ப்பு**

தமிழகத்தின் உள் மாவட்டங்களின் பல இடங்களில் செவ்வாய்க்கிழமை மழை பெய்ய வாய்ப்புள்ளது என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்தது.

தமிழகத்தில் கடந்த சில நாள்களாக மழை பெய்து வருகிறது. கடலோர மாவட்டங்களைக் காட்டிலும் உள் மாவட்டங்களில் அதிக மழை பெய்து வருகிறது.

இந்த நிலையில், வெப்பச் சலனத்தின் காரணமாக தமிழகத்தின் உள் மாவட்டங்களின் பல இடங்களில் செவ்வாய்க்கிழமை மழையோ இடியுடன் மழையோ பெய்யும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

**ரப்பர், காபி தோட்டத் தொழிலில் அன்னிய நேரடி முதலீடு: மத்திய அரசு பரிசீலனை**

நாட்டில் அன்னிய நேரடி முதலீடுகளை அதிகளவில் ஈர்ப்பதற்காக, ரப்பர், காபித் தொழிலிலும் அவற்றை அனுமதிப்பது குறித்து மத்திய அரசு பரிசீலித்து வருவதாகத் தெரிகிறது.

இதுதொடர்பாக, மத்திய அரசு வட்டாரங்கள் கூறியதாவது:

தற்போது, தேயிலைத் தோட்டங்களில் மட்டும் அன்னிய நேரடி முதலீடு அனுமதிக்கப்பட்டு வருகிறது. பிற தோட்டப் பயிர்களில், அவ்வாறு அனுமதிக்கப்படுவதில்லை.

தற்போது ரப்பர், காபி தோட்டங்களிலும் அன்னிய நேரடி முதலீடுகளை அனுமதிப்பது தொடர்பான திட்டம் மத்திய வர்த்தக, தொழில் துறை

அமைச்சகத்தின் பரிசீலனையில் உள்ளது.

கடந்த 2014-15-ஆம் நிதியாண்டில், இந்தியாவின் ரப்பர் இறக்குமதி 4.42 லட்சம் டன்களாக இருந்தது. உள்நாட்டில் ரப்பர் உற்பத்தி குறைந்ததே, இதற்கு முக்கிய காரணமாகும்.

ரப்பர், காபி தோட்டங்களில் அன்னிய நேரடி முதலீடுகள் அனுமதிக்கப்படுவதன் மூலம், ரப்பர் இறக்குமதியின் அளவு குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும், காபியின் ஏற்றுமதி அதிகரிக்கக் கூடும் என்று அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

**21 இல் விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம்**

சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டம் வரும் வெள்ளிக்கிழமை (ஆக. 21) நடைபெற உள்ளது.

வரும் வெள்ளிக்கிழமை காலை 11 மணிக்கு ஆட்சியர் வா.சம்பத் தலைமையில் நடைபெற உள்ள இக்கூட்டத்தில் விவசாயிகள் கலந்து கொண்டு வேளாண்மை தொடர்பான தங்களது குறைகளை நேரிலும், விண்ணப்பம் மூலமாகவும் தெரிவிக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

**மேட்டூர் அணைக்கு நீர்வரத்து மேலும் அதிகரிப்பு**

காவிரியின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் பெய்துவரும் மழையின் காரணமாக மேட்டூர் அணைக்கு வரும் நீரின் அளவு மேலும் அதிகரித்துள்ளது.

ஞாயிற்றுக்கிழமை காலை மேட்டூர் அணைக்கு வரும் நீரின் அளவு நொடிக்கு 8,255 கன அடியாகவும் திங்கள்கிழமை காலை நொடிக்கு 10,141 கன அடியாகவும் அதிகரித்துள்ளது. திங்கள்கிழமை காலை

மேட்டூர் அணையின் நீர்மட்டம் 91.40 அடியாக இருந்தது. அணையிலிருந்து காவிரி டெல்டா பாசனத்துக்கு நொடிக்கு 13 ஆயிரம் கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. அணையின் நீர் இருப்பு 54.26 டி.எம்.சியாக இருந்தது.

**ரோவர் வேளாண் அறிவியல் மையத்தில் காடை வளர்ப்பு இலவச பயிற்சி**

பெரம்பலூர் மாவட்டம், வாலிகண்டபுரத்தில் உள்ள ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மையத்தில் புதன்கிழமை (ஆக. 19) காடை வளர்ப்பு குறித்து இலவச பயிற்சி அளிக்கப்பட உள்ளது.

இந்தப் பயிற்சியில் காடைக் குஞ்சு பராமரிப்பு, கறிக் காடை வளர்ப்பு, முட்டைக் காடை வளர்ப்பு, காடை வளர்ப்பின் பயன்கள் மற்றும் சந்தை வாய்ப்பு, தீவன மேலாண்மை ஆகியவை குறித்து பயிற்சி அளிக்கப்பட உள்ளது. மாறிவரும் பொருளாதார சூழலில் கறிக் காடைக்கான தேவை அதிகரித்து வருகிறது. காடைகளுக்கான தேவை அதிகமுள்ள இடங்களில் காடைப் பண்ணை அமைத்து லாபம் ஈட்டலாம். எனவே, இந்தப் பயிற்சியில் பங்கேற்க விருப்பமுள்ள விவசாயிகள் 87541 14165 என்ற செல்லிடப்பேசி எண்ணில் தொடர்பு கொண்டு முன்பதிவு செய்துகொள்ள வேண்டும் என்றார் வேளாண் அறிவியல் மைய திட்ட ஒருங்கிணைப்பாளர் ப. விஜயலட்சுமி.

**விவசாயிகளுக்கு மானியத்தில் வேளாண் இயந்திரங்கள்**

வேளாண்மை பொறியியல் துறை மூலமாக விவசாயிகளுக்கு மானிய விலையில் வேளாண் இயந்திரங்கள் வழங்கப்படுவதாக ஆட்சியர் எஸ்.சுரேஷ்குமார் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து மாவட்ட செய்தித் தொடர்பு அலுவலகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

கடலூர் மாவட்டத்தில் வேளாண்மை பொறியியல் துறை மூலமாக தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டம் மற்றும் வேளாண்மை இயந்திரமயமாக்கலுக்கான சார் இயக்கத்தின் கீழ் விவசாயிகளுக்கு நெல் நடவு இயந்திரம், பல்வகை தானியங்கள் கதிரடிக்கும் கருவி, நேரடி விதைப்புக் கருவி, மணிலா காய் பிரித்தெடுக்கும் கருவி போன்றவை மானியத்தில் வழங்கப்படுகின்றன.

இதனைப் பெறுவதற்கான விண்ணப்பங்கள் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகள், சிறு விவசாயிகள், குறு விவசாயிகள் பெண் விவசாயிகள் மற்றும் பொதுப் பிரிவினரிடமிருந்து வரவேற்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் பயன்பெறவுள்ள கடலூர் மாவட்ட விவசாயிகள், தங்களின் வட்டத்துக்குள்பட்ட உதவி செயற்பொறியாளர், வேளாண்மை பொறியியல் துறை அலுவலகங்களில் உரிய ஆவணங்களுடன் விண்ணப்பிக்கலாம்.

கடலூர், பண்ருட்டி, குறிஞ்சிப்பாடி வட்டம் பகுதி விவசாயிகள் கடலூர் - பாண்டி சாலை சின்னகங்கணாங்குப்பத்திலுள்ள உதவி செயற்பொறியாளர் (வே.பொ) அலுவலகத்தையும், சிதம்பரம்

மற்றும் காட்டுமன்னார்கோவில் வட்ட விவசாயிகள் சிதம்பரம், பள்ளிப்படையிலுள்ள உதவி செயற்பொறியாளர் (வே.பொ)

அலுவலகத்தையும் தொடர்புகொள்ளலாம் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**நீர்ப்பிடிப்புப் பகுதியில் மழை பெய்தும் அணைகளுக்கு நீர்வரத்து இல்லை**

திருநெல்வேலி மாவட்டத்தில் பரவலாக மழை பெய்துள்ளது. நீர்ப்பிடிப்புப் பகுதியில் மழை பெய்தபோதிலும் அணைகளுக்கு நீர்வரத்து இல்லை.

நிகழ் தென்மேற்குப் பருவத்தில் சரிவர மழை பெய்யாததால், எதிர்பார்த்தவாறு திருநெல்வேலி மாவட்டத்தில் அணைகளுக்கு நீர்வரத்து இல்லை. இதனால் அணைகளின் நீர்மட்டம் குறைந்து வருகிறது. கடும் வெப்பமும் நிலவி வருவதால் பரவலாக தண்ணீர் தட்டுப்பாடு எழுந்துள்ளது.

இதற்கிடையே, ஞாயிற்றுக்கிழமை இடியுடன் பரவலாக மழை பெய்தது. களக்காட்டில் அதிகபட்சம் 29.4 மி.மீ. மழை பதிவானது. பாபநாசம் அணையில் 2 மி.மீ., ராமநதி அணையில் 3 மி.மீ., கருப்பாநதி அணையில் 4 மி.மீ., குண்டாறு அணையில் 2 மி.மீ., அடவிநயினார் அணையில் 4 மி.மீ. மழை பதிவானது. ஆய்க்குடியில் 10.2 மி.மீ., ஆலங்குளத்தில் 7.6. மி.மீ., சிவகிரி, சங்கரன்கோவிலில் தலா 7 மி.மீ., திருநெல்வேலி, பாளையங்கோட்டையில் தலா 14 மி.மீ. மழை பதிவானது.

குறைந்த நீர்வரத்து: நீர்ப்பிடிப்புப் பகுதியில் மழை பெய்தபோதும் அணைகளுக்கு நீர்வரத்து அதிகரிக்கவில்லை. பாபநாசம் அணைக்கு விநாடிக்கு 477.08 கனஅடி, மணிமுத்தாறு அணைக்கு 15 கனஅடி, கடனாநதி அணைக்கு 89.80 கனஅடி, ராமநதி அணைக்கு 27.96 கனஅடி, குண்டாறு அணைக்கு 10.34 கனஅடி, அடவிநயினார் அணைக்கு 7 கனஅடியும், கொடுமுடியாறு அணைக்கு 33.23 கனஅடியும் நீர்வரத்து இருந்தது.

நீர்மட்டம் நிலவரம்: திங்கள்கிழமை நிலவரப்படி, பாபநாசம் அணை நீர்மட்டம் 63.30 அடி, சேர்வலாறு அணை நீர்மட்டம் 76.80 அடி, மணிமுத்தாறு அணை நீர்மட்டம் 67.45 அடியாக இருந்தது.

**தூத்துக்குடி மாவட்டத்தில் 2.11 செ.மீ. மழை பதிவு**

தூத்துக்குடி மாவட்டம் முழுவதும் 2.11 செ.மீ. மழை பதிவாகியதால் வெப்பம் தணிந்து குளிர்ச்சி நிலவுகிறது.

தூத்துக்குடி மாவட்டத்தில் கோவில்பட்டி, கடம்பூர், காடல்குடி, சாத்தான்குளம் ஆகிய பகுதிகளில் ஞாயிற்றுக்கிழமை பலத்த மழை பெய்தது. மாவட்டம் முழுவதும் ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிமுதல் திங்கள்கிழமை காலை 8 மணிவரை 2.11 செ.மீ. மழை பதிவாகியுள்ளது. கோவில்பட்டியில் 51, காடல்குடியில் 50, கடம்பூரில் 19 மி.மீட்டரும் மழை பதிவாகியுள்ளது.

சாத்தான்குளத்தில் 19.2, விளாத்திகுளத்தில் 14, கழுகுமலையில் 15, கயத்தாறில் 11, ஓட்டப்பிடாரத்தில் 8 மி.மீட்டரும் மழை பதிவாகியுள்ளது. தூத்துக்குடியில் 2.5 மி.மீ. மழை மட்டுமே பதிவாகியுள்ளது.

**வாழைத்தார்களை அரசே கொள்முதல் செய்ய விவசாயிகள் கோரிக்கை**

ஸ்ரீவைகுண்டம் பகுதியில் வாழைத் தார்களை அரசே கொள்முதல் செய்யவேண்டும் என தாமிரவருணி பாசன விவசாயிகள் பாதுகாப்பு சங்கத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தாமிவருரணி பாசன விவசாயிகள் பாதுகாப்பு சங்க ஆலோசனைக் கூட்டம், ஸ்ரீவைகுண்டத்தில் நடைபெற்றது. கூட்டத்துக்கு ராமச்சந்திரன் தலைமை வகித்தார். தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்டச் செயலர் பெருமாள், ஒருங்கிணைப்பாளர் கந்தசாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில், வாழைத் தார்களை கிலோ அடிப்படையில் அரசே கொள்முதல் செய்யவேண்டும்; வாழைக்கான உற்பத்தி செலவுக்கு மானியம் வழங்கவேண்டும் என்பன உள்பட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. நம்பிராஜன் நன்றி கூறினார்.

**சம்பா சாகுபடிக்காக வீராணம் ஏரியில் இருந்து தண்ணீர் திறந்து விட வேண்டும் தமிழக வாழ்வுரிமை கட்சி கூட்டத்தில் தீர்மானம்**



காட்டுமன்னார்கோவில்

சம்பா சாகுபடிக்காக வீராணம் ஏரியில் இருந்து தண்ணீர் திறந்து விட வேண்டும் என தமிழக வாழ்வுரிமை கட்சி கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

ஆய்வுக்கூட்டம்

தமிழக வாழ்வுரிமை கட்சியின் குமராட்சி ஒன்றிய நிர்வாகிகளின் ஆய்வுக்கூட்டம் எள்ளேரி கிராமத்தில் நடந்தது. கூட்டத்துக்கு ஒன்றிய செயலாளர் தமிழ் தலைமை தாங்கினார். மாநில துணை பொது செயலாளர் கண்ணன், நிர்வாக குழு உறுப்பினர் ரமேஷ், மாவட்ட செயலாளர் முடிவண்ணன், நிர்வாகக்குழு உறுப்பினர் தமிழ்தம்பி ஆகியோர் முன்னிலை வகித்தனர். நகர செயலாளர் பரமசிவம் வரவேற்றார். சிறப்பு அழைப்பாளராக தமிழக வாழ்வுரிமை கட்சியின் நிறுவனர் வேல்முருகன் கலந்து கொண்டு பேசினார்.

கூட்டத்தில் விவசாயிகள் நலன் கருதி சம்பா சாகுபடிக்காக வீராணம் ஏரியில் இருந்து விரைவில் தண்ணீர் திறந்து விட வேண்டும். எள்ளேரி பஸ் நிறுத்தத்தில் இருந்து சிங்கார வீதிவரை சேதமடைந்துள்ள சாலையை விரைந்து சீரமைக்க நெடுஞ்சாலை துறை அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். சென்னையில் வருகிற 27–ந்தேதி கட்சி சார்பில் நடைபெறும் பொதுக்கூட்டத்தில் குமராட்சி ஒன்றியத்தில் இருந்து திரளாக கலந்து கொள்ள வேண்டும் என்பன உள்பட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கலந்து கொண்டவர்கள்

இதில் மாவட்ட தலைவர் ஆளவந்தான், மாநில மாணவரணி செயலாளர் ரவி, பிரகாஷ், நிர்வாகிகள் ஆரிப்புல்லா, முகமது எகையா, முனியா,. வக்கீல் பிரிவு வைத்திலிங்கம், சேகர், குமார் உள்பட பலர் கலந்து கொண்டனர். முடிவில் கிளை செயலாளர் உத்திராபதி நன்றி கூறினார்.

**சம்பா நெல் எந்திர முறையில் நேரடி விதைப்பு அமைச்சர் ஜெயபால் தொடங்கி வைத்தார்**



தெத்தி கிராமத்தில் சம்பா நெல் எந்திர முறையில் நேரடி விதைப்பை அமைச்சர் ஜெயபால் தொடங்கி வைத்தார்.

**எந்திர முறை நேரடி விதைப்பு**

நாகை மாவட்டம் தெத்தி கிராமத்தில் வேளாண்மை துறை சார்பில் சம்பா நெல் எந்திர முறையில் நேரடி விதைப்பு தொடங்கப்பட்டது. நிகழ்ச்சிக்கு கலெக்டர் பழனிசாமி தலைமை தாங்கினார். இதில் மீன்வளத்துறை அமைச்சர் ஜெயபால் கலந்து கொண்டு, எந்திர முறையில் நேரடி விதைப்பை தொடங்கி வைத்து பேசினார். அப்போது அவர் கூறியதாவது:-

இந்த ஆண்டு 12.5 லட்சம் ஏக்கர் பரப்பில் காவிரி டெல்டா மாவட்ட விவசாயிகள் சம்பா சாகுபடி மேற்கொள்ள பாசனத்திற்காக மேட்டூர் அணையிருந்து தண்ணீர் திறந்து விடப்படும் என்று முதல்-அமைச்சர் அறிவித்தார். அதன்படி மேட்டூரிலிருந்து தண்ணீர் திறந்து விடப்பட்டு கடந்த 13-ந்தேதி கல்லணையிலிருந்து பாசனத்திற்காக தண்ணீர் திறக்கப்பட்டு வந்து கொண்டிருக்கிறது. நாகை மாவட்டத்தில் சம்பா மற்றும் தாளடி பருவங்களில் இயல்பாக 3 லட்சத்து 42 ஆயிரத்து 500 ஏக்கரில் சாகுபடி மேற்கொள்ளப்படும். ஆனால் தற்போது சரியான தருணத்தில் திறந்து விடப்படும் காவிரி நீரை பயன்படுத்தி நாகை மாவட்டத்தில் இந்த ஆண்டு சம்பா மற்றும் தாளடி பருவத்தில் 3 லட்சத்து 47 ஆயிரத்து 250 ஏக்கரில் நெல் பயிரிட திட்டமிடப்பட்டுள்ளது. இதில் ஒரு லட்சத்து 25 ஆயிரம் ஏக்கர் பரப்பில் நேரடி நெல் விதைப்பு முறையில் சாகுபடி மேற்கொள்ளவும் திட்டமிடப்பட்டுள்ளது. நேற்று முதல் வருகிற 29-ந்தேதி முடிய 15 நாட்களுக்கு நாகை மாவட்டத்தில் உள்ள அனைத்து கிராமங்களிலும் சம்பா சாகுபடி தொழில் நுட்பங்கள் குறித்த விழிப்புணர்வு விவசாயிகளிடையே ஏற்படுத்துவதற்காக விழிப்புணர்வு முகாம் நடைபெறுகிறது.

மானியம்

நடப்பு சம்பா பருவத்தில் எந்திரம் மூலம் நேரடி நெல் விதைப்பு செய்யும் விவசாயிகளுக்கு ஒரு எக்டருக்கு ரூ.5 ஆயிரம் வீதம் மானியம் வழங்கப்படுகிறது. அதில் ரூ.2 ஆயிரத்து 545 எந்திரம் மூலம் நேரடி விதைப்பு செய்தல், களைக்கொள்ளி பயன்படுத்துதல் மற்றும் பொட்டாசியம் குளோரைடு கொண்டு விதை நேர்த்தி செய்தல் முதலியவற்றிற்கான செலவின தொகையை விவசாயியின் வங்கி கணக்கில் வரவு வைக்கப்படும். மீதமுள்ள ரூ.2 ஆயிரத்து 455 மதிப்பிற்கு நெல்விதை, உயிர் உரங்கள் மற்றும் நெல் நுண்ணூட்டச்சத்து உரம் முதலிய இடுபொருட்கள் வழங்கப்படும். நாகை மாவட்டத்திற்கு இதுபோன்று 8 ஆயிரம் எக்டரில் செயல்விளக்கத்திடல் அமைக்க ரூ.4 கோடி நிதி ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது. இப்பணி நாகை, கீழ்வேளூர், கீழையூர், வேதாரண்யம் மற்றும் தலைஞாயிறு வட்டாரங்களில் செயல்படுத்தப்படும். திருமருகல் வட்டாரத்தில் எந்திர விசை நடவு செய்யும் விவசாயிகளுக்கு ஒரு எக்டேருக்கு ரூ.5 ஆயிரம் மானியமாக வழங்கிட 750 எக்டேர் பரப்புக்கு ரூ.37.5 லட்சம் ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது. மயிலாடுதுறை, குத்தாலம், சீர்காழி, கொள்ளிடம் மற்றும் செம்பனார்கோவில் வட்டாரங்களில் எந்திர நடவு மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு பின் ஏற்பு மானியமாக ஒரு எக்டேருக்கு ரூ.3 ஆயிரம் வீதம் 27 ஆயிரத்து 100 எக்டேருக்கு ரூ.8.13 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. நேரடி நெல் விதைப்பு செயல்விளக்க மானியமாக ரூ.4 கோடியும், எந்திர நடவு செயல் விளக்க மானியமாக ரூ.37.5 லட்சமும், எந்திர நடவிற்கு பின் ஏற்பு மானியமாக ரூ.81.3 கோடியும் என மொத்தம் ரூ. 12 கோடியே 50 லட்சத்து 50 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

நிகழ்ச்சியில் அமைச்சர் ஜெயபால் விவசாயிகளுக்கு சுவர்ணாசப் நெல் விதை, நெல் நுண்ணூட்டச்சத்து, அசோஸ்பைரில்லம் மற்றும்

பாஸ்போபாக்டீரியா திரவ உயிர் உரங்களை வழங்கினார். இதில் கோபால் எம்.பி., நாகை வேளான்மை இணை இயக்குனர் மயில்வாகனம், ஒன்றியக்குழு உறுப்பினர் ஜெயகுமார், ஊராட்சிமன்ற தலைவர் சுந்தரமூர்த்தி உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**குன்னூரில் போதிய மழை பெய்யாததால் முட்டைகோஸ் பயிர்களை காக்க தண்ணீர் பாய்ச்சும் விவசாயிகள்**



குன்னூரில் போதிய மழை பெய்யாததால் முட்டைகோஸ் பயிர்களை காக்க விவசாயிகள் தண்ணீர் பாய்ச்சி வருகிறார்கள்.

மழை குறைவு

நீலகிரி மாவட்டத்தில் ஆண்டு தோறும் ஜூன் மற்றும் ஜூலை மாதங்களில் தென்மேற்கு பருவமழை பெய்யும். அக்டோபர், நவம்பர் மாதங்களில் வடகிழக்கு பருவமழை பெய்யும். குன்னூரை பொருத்தவரை தென்மேற்கு பருவமழை இந்த ஆண்டு குறைவாகவே பெய்து உள்ளது. இதன் காரணமாக தேயிலை மற்றும் மலைகாய்கறி விவசாயம் பெரிதும் பாதிக்கப்பட்டு உள்ளது.

குன்னூர் அருகே உள்ள கூர்காஹில், கூர்காகேம்ப், லூர்து புரம் போன்ற பகுதிகளில் மலைகாய்கறி விவசாயம் 50 ஏக்கரில் நடைபெற்று வருகிறது. இங்கு கேரட், முள்ளங்கி, முட்டைகோஸ், காலிபிளவர், உருளைக்கிழங்கு போன்ற பயிர்கள் அந்தந்த சீசனுக்கு தகுந்தவாறு பயிரிடப்பட்டு வருகிறது.

தண்ணீர் பாய்ச்சும் விவசாயிகள்

தற்போது முட்டைகோஸ் பயிரிடும் காலம் என்பதால் ஏராளமான விவசாயிகள் முட்டைகோஸ் நாற்றுகளை நடவு செய்து உள்ளனர். ஆனால் மழை குறைவு காரணமாக முட்டைகோஸ் நாற்றுகள் வாடத்தொடங்கி உள்ளன. இதனை தொடர்ந்து குன்னூர் விவசாயிகள் தங்களுடைய தோட்டங்களில் உள்ள கிணறுகள் மற்றும் நீரோடைகளில் இருந்து தண்ணீர் எடுத்து முட்டைகோஸ் பயிர்களுக்கு பாய்ச்சி வருகிறார்கள்.

இதுகுறித்து விவசாயிகள் கூறுகையில், குன்னூரில் இந்த ஆண்டு போதிய அளவு மழை பெய்யாததால் சுமார் 50 ஏக்கரில் பயிரிடப்பட்டு உள்ள மலைக்காய்கறிகள் வாடத்தொடங்கி உள்ளன. எனவே பயிர்களை காக்க நீரோடை மற்றும் கிணறுகளில் இருந்து தண்ணீர் எடுத்து பாய்ச்சி வருகிறோம். எனினும் மழை பெய்தால் மட்டுமே பயிர்கள் நன்கு செழித்து வளரும் என்று தெரிவித்தனர்.

## கர்நாடக அணைகள் திறப்பு எதிரொலி: மேட்டூர் அணைக்கு நீர்வரத்து மேலும் அதிகரிப்பு




மேட்டூர்,

கர்நாடக மாநில அணைகளில் இருந்து தண்ணீர் திறந்து விடுவதன் எதிரொலியாக மேட்டூர் அணைக்கு நீர்வரத்து மேலும் அதிகரிக்க தொடங்கி உள்ளது.

தண்ணீர் திறப்பு

காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பலத்த மழை பெய்து வருவதால் கர்நாடக மாநிலத்தில் உள்ள கபினி மற்றும் கிருஷ்ணராஜசாகர் அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்து உள்ளது. இதனால் கபினி அணையில் இருந்து வினாடிக்கு 3 ஆயிரத்து 500 கனஅடி தண்ணீரும், கிருஷ்ணராஜசாகர் அணையில் இருந்து வினாடிக்கு 6 ஆயிரம் கனஅடி தண்ணீரும் என மொத்தம் வினாடிக்கு 9 ஆயிரத்து 500 கனஅடி தண்ணீர் காவிரியில் திறந்து விடப்படுகிறது. இந்த தண்ணீர் படிப்படியாக மேட்டூரை வந்தடைந்தது. இதனால் வினாடிக்கு 1,000 கனஅடியாக வந்து கொண்டு இருந்த நீர்வரத்து நேற்று முன்தினம் வினாடிக்கு 3 ஆயிரம் கனஅடியாக

அதிகரித்தது.மேலும் நீர்வரத்து அதிகரிப்பு\இந்த நிலையில் நேற்று மேட்டூர் அணைக்கு நீர்வரத்து மேலும் அதிகரிக்க தொடங்கி உள்ளது. அதாவது, நேற்று மேட்டூர் அணைக்கு வினாடிக்கு 8 ஆயிரத்து 225 கனஅடி வீதம் நீர்வரத்து இருந்தது. மேட்டூர் அணையில் இருந்து பாசனத்திற்காக வினாடிக்கு 13 ஆயிரம் கனஅடி வீதம் தண்ணீர் திறந்து விடப்படுகிறது. அணையின் நீர்மட்டம் 91.63 அடியாக உள்ளது. எனவே, அணைக்கு நீர்வரத்து மேலும் அதிகரிக்குமானால் நீர்மட்டம் உயர வாய்ப்பு உள்ளது.

**தஞ்சை மாவட்டத்தில் பலத்த மழை**



காவிரிடெல்டா பாசனத்திற்காக மேட்டூர் அணையில் இருந்து கடந்த 9-ந்தேதி தண்ணீர் திறந்துவிடப்பட்டது. இந்த தண்ணீர் கல்லணையை வந்தடைந்தவுடன் தஞ்சை, நாகை, திருவாரூர் ஆகிய மாவட்டங்களின் பாசனத்திற்காக கல்லணைகால்வாய், வெண்ணாறு, கொள்ளிடம்ஆறு ஆகியவற்றில் தண்ணீர் திறந்துவிடப்பட்டது. இதனால் 3 மாவட்டங்களிலும் சம்பா சாகுபடிக்கு தயாராகி வரும் விவசாயிகள் இந்த ஆண்டு சம்பா சாகுபடியை வெற்றிகரமாக முடித்துவிடலாம் என்று மகிழ்ச்சியில் இருந்தனர்.

இந்தநிலையில் நேற்றுமுன்தினம் தஞ்சை மாவட்டத்தில் பலத்த மழை பெய்தது. இதனால் சம்பா சாகுபடிக்கு தயாராகி வரும் விவசாயிகள், நிலத்தை உழுது நடவுக்கு தயார் செய்ய இந்த மழை பயனுள்ளதாக இருக்கும் என்று மகிழ்ச்சி அடைந்துள்ளனர். மேலும் கடந்த சில நாட்களாக வெயிலின் தாக்கத்தினால் அவதிப்பட்டு வந்த மக்களும் இந்த மழையினால் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். நேற்றுகாலை முதல் வழக்கம்போல் வெயில் கொளுத்தியது. பிற்பகல் 1.30 மணி அளவில் கருமேகங்கள் தஞ்சையை சூழ்ந்து வந்தன. 2-வது நாளாக பலத்த மழை பெய்யும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் லேசாக மழை தூறல் மட்டும் பெய்தது.

தஞ்சை மாவட்டத்தில் நேற்றுகாலை 8.30 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் பதிவான மழைஅளவு மில்லிமீட்டரில் வருமாறு:-

தஞ்சை-86, வல்லம்-30, குருங்குளம்-38, திருவையாறு-17, பூதலூர்-55.4, திருக்காட்டுப்பள்ளி-14.8, கல்லணை-49.2, ஒரத்தநாடு-9.6, நெய்வாசல்தென்பாதி-34.2, வெட்டிக்காடு-17.2, பாபநாசம்-46, அய்யம்பேட்டை-11, பட்டுக்கோட்டை-30, அதிராம்பட்டினம்-37.8, ஈச்சன்விடுதி-4.6, மதுக்கூர்-5, பேராவூரணி-49.

தஞ்சை மாவட்டத்தில் மொத்தம் 564.8 மில்லிமீட்டர் மழை பெய்தது. சராசரி மழைஅளவு 26.9 மில்லிமீட்டர் ஆகும்.

**மருதூர் மேலக்கால் பாசன பகுதிக்கு தண்ணீர் திறந்து வாழைப்பயிர்களை காப்பாற்ற வேண்டும் கலெக்டரிடம் விவசாயிகள் கோரிக்கை**



தூத்துக்குடி,

மருதூர் மேலக்கால் பாசன பகுதிக்கு தண்ணீர் திறந்து விட்டு வாழைப்பயிர்களை காப்பாற்ற வேண்டும் என்று விவசாயிகள் கலெக்டரிடம் கோரிக்கை மனு கொடுத்தனர்.

குறைதீர்க்கும் நாள்

தூத்துக்குடி மாவட்ட மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நேற்று காலையில் நடந்தது. கூட்டத்துக்கு கலெக்டர் ம.ரவிகுமார் தலைமை தாங்கினார்.

மாவட்ட வருவாய் அலுவலர் சு.முருகையா முன்னிலை வகித்தார். கூட்டத்தில் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி மக்கள் மனு கொடுத்தனர்.

தண்ணீர் திறக்க வேண்டும்

தூத்துக்குடி தாமிரபரணி மருதூர் மேலக்கால், வேளூர் குளம் நீரினை பயன்படுத்துவோர் சங்க தலைவர் இ.அலங்காரம் தலைமையில் விவசாயிகள் கலெக்டர் அலுவலகத்துக்கு வந்தனர். அவர்கள் கலெக்டரிடம் கொடுத்த மனுவில், தாமிரபரணி–மருதூர் அணைக்கட்டு

மேலக்கால் பாசனத்துக்கு உட்பட்ட விவசாய நிலங்களில் சுமார் 9 ஆயிரம் ஏக்கர் பரப்பில் வாழை சாகுபடி செய்யப்பட்டு உள்ளது. அந்த வாழைகள் தற்போது குலைதள்ளும் நிலையில் உள்ளன. ஆனால் எங்கள் குளங்கள் அனைத்தும் வறண்டுவிட்டன. இதனால் வாழைப் பயிர்கள் பாதிக்கப்படும் சூழ்நிலை உள்ளது. ஆகையால் தாமிரபரணி அணைக்கட்டுகளில் உள்ள அதிகப்படியான நீர் இருப்பதை கணக்கில் கொண்டு உடனடியாக தண்ணீர் திறந்துவிட்டு வாழை பயிர்களை காப்பாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும், எ ன்று கூறி உள்ளனர்.

<u>குடிநீர்</u>

தூத்துக்குடி மாப்பிள்ளையூரணி ராம்தாஸ் நகர், ஆசைத்தம்பி நகர், வண்ணார்பேட்டை ஆகிய பகுதிகளை சேர்ந்த மக்கள் நேற்று காலை கலெக்டர் அலுவலகத்துக்கு வந்தனர். அவர்கள் கலெக்டரிடம் கொடுத்த மனுவில், எங்களுக்கு சுமார் ஒருவருடமாக பஞ்சாயத்து நிர்வாகம் சீரான குடிநீர் வழங்கவில்லை. இது தொடர்பாக பலமுறை மனு கொடுத்தும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இதனால் குடிநீர் கிடைக்காமல் மிகவும் அவதிப்பட்டு வருகிறோம். ஆகையால் எங்களுக்கு சீராக குடிநீர் வினியோகம் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும், என்று கூறி உள்ளனர்.

<u>பழைய காயல்</u>

இதே போல் பழையகாயல் பகுதி மக்கள் கலெக்டர் அலுவலகத்துக்கு வந்து மனுகொடுத்தனர். தங்கள் பகுதியைச் சேர்ந்த ஒருவர் தங்களை மிரட்டி வருவதாகவும், அது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரி மனு கொடுத்தனர்.

உடன்குடியை சேர்ந்த சு.முத்துலட்சுமி என்பவர் கலெக்டரிடம் கொடுத்த மனுவில், உடன்குடி தேர்வுநிலை பேரூராட்சி 5–வது வார்டு அங்கன்வாடி கட்டிடம் இடிந்து விழுந்து எனது குழந்தைக்கு தலையில் பலதத காயம் ஏற்பட்டது. அருகில் உள்ள அரசு ஆஸ்பத்திரிக்கு குழந்தையை கொண்டு சென்ற போது, அவர்கள் உரிய சிகிச்சை அளிக்க மறுத்துவிட்டனர்.

ஆகையால் உதவி கலெக்டர் தலைமையில் உரிய விசாரணை நடத்த வேண்டும். எனது குழந்தைக்கு மருத்துவ செலவு செய்ய முடியாமல் இருப்பதால் உரிய இழப்பீடு வழங்க வேண்டும். அங்கன்வாடி மைய கட்டிடத்தின் தரத்தை மறு ஆய்வு செய்ய உத்தரவிட வேண்டும் என்று கூறிஉள்ளார்.

**மாவட்டம் முழுவதும் பரவலாக மழை**




தூத்துக்குடி மாவட்டத்தில் நேற்று முன்தினம் பரவலாக மழை பெய்தது.

<u>பரவலாக மழை</u>

தூத்துக்குடி மாவட்டத்தில் கடந்த 2 நாட்களாக பலத்த காற்று வீசியது. அதே போன்று வெயிலும் மக்களை சுட்டெரித்தது.

நேற்று முன்தினம் இரவில் திடீரென இடி, மின்னலுடன் பரவலாக மழை பெய்தது.

அதிகபட்சமாக கோவில்பட்டியில் 51 மில்லி மீட்டரும், காடல்குடியில் 50 மில்லி மீட்டர் மழையும் பெய்தது. நேற்று வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டது.

மழை விவரம்

நேற்று முன்தினம் காலை 8 மணி முதல் நேற்று காலை 8 மணி வரை பெய்த மழை விவரம் (மில்லி மீட்டரில்) வருமாறு:–

கோவில்பட்டி– 51

ஓட்டப்பிடாரம்– 0.8

சாத்தான்குளம்– 19.2

தூத்துக்குடி– 2.5

விளாத்திகுளம்– 14

கயத்தாறு– 11

கீழஅரசடி– 3.2

எட்டயபுரம்– 5

கடம்பூர் – 19

மணியாச்சி– 2

சூரங்குடி– 5

காடல்குடி– 50

வைப்பாறு– 7

கழுகுமலை– 15

**மூணாறு தலைப்பில் இருந்து தண்ணீர் திறந்து விடப்பட்டது**



திருவாரூர் மாவட்ட கலெக்டர் மதிவாணன் மூணாறு தலைப்பை திறந்து வைத்தபோது எடுத்த படம்.

திருவாரூர், நாகை மாவட்ட பாசனத்துக்காக மூணாறு தலைப்பில் இருந்து தண்ணீர் திறந்து விடப்பட்டது.

மூணாறு தலைப்பு

திருவாரூர் மாவட்டம் நீடாமங்கலம் அருகே உள்ளது கோரையாறு தலைப்பு. மேட் டூர் அணையில் இருந்து திறந்து விடப்படும் தண்ணீர் கல் லணை, பெரிய வெண்ணாறு வழியாக கோரையாறு தலைப் புக்கு வந்து சேர்கிறது. இங்கி ருந்து வெண்ணாறு, கோரை யாறு, பாமணி ஆறு ஆகிய 3 ஆறுகளுக்கு தண்ணீர் செல் வதால், கோரையாறு தலைப்பை மூணாறு தலைப்பு என்றும் கூறுவார்கள். மேட்டூர் மற்றும் கல்லணையில் இருந்து தண்ணீர் திறக்கப்பட் டதை தொடர்ந்து மூணாறு தலைப்பில் இருந்து திருவாரூர் மற்றும் நாகை மாவட்ட விவ சாய நிலங்களுக்கு பாசனம் அளிப்பதற்காக தண்ணீர் திறந்து விடும் நிகழ்ச்சி நடை பெற்றது.

நிகழ்ச்சியில் திருவாரூர் மாவட்ட கலெக்டர் மதி வாணன் மூணாறு

தலைப்பில் இருந்து தண்ணீரை திறந்து வைத்து பேசினார். அப்போது அவர் கூறியதா வது:-

2,295 கன அடி

முதல்-அமைச்சர் ஜெயல லிதாவின் உத்தரவின்படி காவிரி டெல்டாவில் நடை பெற உள்ள சம்பா சாகுபடி பாசனத்துக்காக மேட்டூர் அணை கடந்த 9-ந் தேதி திறந்து விடப்பட்டது. இதை தொடர்ந்து கடந்த 13-ந் தேதி கல்லணை திறக்கப்பட்டது. மேட்டூர் மற்றும் கல்லணை திறக்கப்பட்டதால் திருவாரூர் மாவட்ட பாசன ஆறுகளுக்கு தண்ணீர் வெகு அளவு வந்து கொண்டிருக்கிறது. இந்த நிலையில் தற்போது மூணாறு தலைப்பில் இருந்து திருவாரூர், நாகப்பட்டினம் மாவட்ட பாசனத்துக்காக தண்ணீர் திறக்கப்பட்டு உள்ளது. இதில் வெண்ணாற்றில் வினாடிக்கு 428 கனஅடியும், கோரை யாற்றில் வினாடிக்கு 1457 கனஅடியும், பாமணி ஆற்றில் வினாடிக்கு 410 கனஅடியும் ஆக கூடுதலாக வினாடிக்கு மொத்தம் 2,295 கனஅடி தண்ணீர் திறந்து விடப்படுகிறது.

அதிக மகசூல்

பாசனத்துக்காக திறந்து விடப்படும் தண்ணீரை விவ சாயிகள் சிக்கனமாக பயன் படுத்தி அதிக மகசூல் பெற்று வளம்பெற வேண்டும். இவ்வாறு கலெக்டர் கூறி னார்.நிகழ்ச்சியில் மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு ஜெய சந்திரன், மாவட்ட வருவாய் அதிகாரி மோகன்ராஜ், வெண் ணாறு வடிநில கோட்ட செயற்பொறியாளர் ரவிச்சந் திரன், வேளாண்மை இணை இயக்குனர் மயில்வாகணன், உதவி கலெக்டர்கள் முத்து மீனாட்சி, செல்வசுரபி, தஞ்சாவூர் கூட்டுறவு வங்கி துணை தலைவர் சங்கர், செய்தி மக்கள் தொடர்பு அதிகாரி குமார் மற்றும் பலர் கலந்து கொண்ட னர்.

**பண்ணைக்குட்டைகள் அமைத்து நீர்நிலைகள் மேம்பட ஒத்துழைக்க வேண்டும் விவசாயிகளுக்கு கலெக்டர் வேண்டுகோள்**



தேசிய ஊரக வேலை உறுதித்திட்டத்தின் கீழ் பண்ணைக்குட்டைகள் அமைத்து நீர்நிலைகள் மேம்பட ஒத்துழைக்க வேண்டும் என்று சிறு, குறு விவசாயிகளுக்கு கலெக்டர் ராஜாராமன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கிராம சபைக் கூட்டம்

சுதந்திர தினத்தினை முன்னிட்டு விருதுநகர் மாவட்டத்தில் உள்ள 450 ஊராட்சிகளிலும் கிராம சபைக் கூட்டம் நடைபெற்றது. விருதுநகர் அருகே இனாம்ரெட்டியபட்டி ஊராட்சியில் நடைபெற்ற கிராம சபைக் கூட்டத்தில் கலெக்டர் ராஜாராமன்¢ சிறப்பு பார்வையாளராக கலந்து கொண்டு, பொது விநியோகத்திட்ட செயல்பாடுகள், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்ட பணிகள் மற்றும் சாலை வசதி,

குடிநீர் விநியோகம் போன்ற பல்வேறு அடிப்படை வசதிகள் ஆகியவை குறித்து விவாதித்தார்.

பின்னர் 10 நபர்களுக்கு தனிநபர் கழிப்பிடம் கட்டுவதற்கான மானிய நிதி உதவியினை வழங்கினார். முன்னதாக கலெக்டர் தலைமையில் குழந்தை தொழிலாளர் முறை எதிர்ப்பு உறுதிமொழி எடுத்துக்கொள்ளப்பட்டது.

கூட்டத்தில் கலெக்டர் பேசும் போது கூறியதாவது:-

திடக்கழிவு மேலாண்மை

குடிநீர் விநியோகம் குறித்தும், கிராமப்புறங்களில் உள்ள சீமைக்கருவேல மரங்களை அழித்திட நடவடிக்கை எடுப்பது குறித்தும், மழைநீர் சேகரிப்பு அமைப்புகளை உருவாக்குதல் மற்றும் பராமரித்தல் குறித்தும், குப்பையை அகற்றி சுற்றுப்புற சுகாதாரத்திற்கு வழி வகுப்பது குறித்தும், பிளாஸ்டிக் உபயோகத்தை தவிர்ப்பது குறித்தும் இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

மாவட்டத்தில் 60 பெரிய ஊராட்சிகளில் திடக்கழிவு மேலாண்மை திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் மக்கும் குப்பை, மக்காத குப்பை என தனித்தனியே பிரித்து மறுசுழற்சி செய்யப்படுகிறது. பொது மக்கள் குப்பைகளை வாறுகால்களில் கொட்டுவதை தவிர்த்து மக்கும் குப்பை, மக்காத குப்பை என தனித்தனியே பிரித்து மறுசுழற்சி செய்ய ஒத்துழைக்க வேண்டும். திறந்த வெளிகளில் மலம் கழிப்பதை தவிர்க்க அரசு தனிநபர் கழிப்பிடம் கட்டுவதற்கு ரூ.12 ஆயிரம் வழங்குகிறது. சுகாதாரம் தான் நமது உடல் ஆரோக்கியத்திற்கு பெரும் பங்காக உள்ளது. சுகாதாரம் மேம்பட மக்கள் ஒத்துழைப்பு நல்க வேண்டும்.

பண்ணைக் குட்டைகள்நீர் நிலைகளை மேம்படுத்த கிராமப்புறங்களில் உள்ள சிறு விவசாயிகளுக்கு மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டதின் கீழ் ரூ.1 லட்சம் முதல் ரூ.1.5 லட்சம் மதிப்பில் பண்ணைக்குட்டை அமைத்துக் கொடுக்கப்படுகிறது. சிறு, குறு விவசாயிகள் இதனைப்பயன்படுத்தி நீர் நிலைகள் மேம்பட முன் வர வேண்டும். அருகில் உள்ள ஊரணிகள் மழைக்காலத்திற்கு முன் சரி செய்யப்பட்டு நீர் ஆதாரத்திற்கு பயன்படுத்தப்படும். தமிழக அரசு கல்வி வளர்ச்சிக்காக பல்வேறு சிறப்பான திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. கல்வி வளர்ச்சி அடைந்தால் தான் நாடு முன்னேற்றம் அடையும். கிராமப்புற மாணவ, மாணவிகள் நல்ல முறையில் கல்வி கற்று சமுதாயத்தின் முன்னேற்றம் அடைய வேண்டும். இவ்வாறு அவர் பேசினார். இந்த நிகழ்ச்சியில் கூட்டுறவு சங்கங்களின் மண்டல இணைப்பதிவாளர் குருமூர்த்தி, உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) பீபீஜான், வட்டார வளர்ச்சி அலுவலர் தனசேகர், இனாம்ரெட்டியாபட்டி ஊராட்சி மன்றத் தலைவர் சந்திரன்¢ உட்பட பலர் கலந்து கொண்டனர்.


தினகரன்

**காவிரி நீர்பிடிப்பு பகுதிகளில் பெய்யும் மழையால் மேட்டூர் அணையின் நீர்மட்டம் உயர்வு**




மேட்டூர்: காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் மழை பெய்து வருவதால் மேட்டூர் அணைக்கு வரும் நீர்வரத்து அதிகரித்துள்ளது. காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் கடந்த சில நாட்களாக கனமழை பெய்து வருகிறது. இதனால் மேட்டூர் அணைக்கு வரும் நீரின் அளவு வினாடிக்கு 10,545 கனஅடியாக அதிகரித்துள்ளது. அணையிலிருந்து 13,000 கனஅடி நீர் திறந்து விடப்படுகிறது. இதகைனயடுத்து அணையின் நீர்மட்டம் 91.20 அடியாக உள்ளது. அணையில் 54.03 டி.எம்.சி அளவிற்கு நீ£ங இருப்பு உள்ளது. இதனிடையே மேட்டூர் அணையின் நீர்பிடிப்பு பகுதிகளிலும் தற்போது பரவலாக மழை பெய்து வருகிறது.

**நாமக்கல் மண்டலத்தில் முட்டை விலை 20 பைசா குறைந்தது**




நாமக்கல் : நாமக்கல் மண்டலத்தில் முட்டை விலை 20 பைசா குறைந்துள்ளது. நாமக்கல்லில், தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழுவின் விலை நிர்ணய குழு கூட்டம் நேற்று நடைபெற்றது. இதில், முட்டை விலையில் 20 பைசா குறைக்கப்பட்டது. அதைத்தொடர்ந்து ஒரு முட்டையின் பண்ணை கொள்முதல் விலை 322 பைசாவாக நிர்ணயம் செய்யப்பட்டது. மற்ற மண்டலங்களில் முட்டை விலை குறைவு, தமிழகம் மற்றும் கேரளாவில் முட்டை விற்பனை சரிவு போன்ற காரணங்களால் விலை குறைக்கப்பட்டுள்ளது.

ஒரு கிலோ முட்டைக்கோழி ரூ.67, ஒரு கிலோ கறிக்கோழி ரூ.75 ஆக நிர்ணயம் செய்யப்பட்டது. மற்ற மண்டலங்களில் நிர்ணயம் செய்யப்பட்ட முட்டை விலை விபரம் (பைசாவில்) வருமாறு: பெங்களூரு- 350, மைசூர்- 357, ஐதராபாத்- 305, மும்பை- 345, விஜயவாடா- 300, டெல்லி- 315.

**லாசல்கானில் முதல் முறையாக வெங்காயம் விலை கிலோ ரூ.43 ஆனது**



மும்பை : மாகாராஷ்டிர மாநிலம் லாசல்கானில் உள்ள ஆசியாவின் மிகப்பெரிய வெங்காய சந்தையில் மொத்த விலையில் வெங்காயம் கிலோ ரூ.43ஐ எட்டியுள்ளது. இந்த ஆண்டில் முதல் முறையாக அதிகபட்ச விலையாக கருதப்படுகிறது. இங்கு முந்தைய ஆண்டின் ஆகஸ்ட் மாதத்தில் சராசரியாக வெங்காயம் விலை கிலோ ரூ.16.10 ஆகவும், 2013ம் ஆண்டில் இது ரூ.36.94ஆகவும் இருந்தது. கடந்த ஆண்டு இதே மாதத்தில் சந்தைக்கு 10,000 குவின்டாலுக்கு மேல் சப்ளை இருந்தது. அறுவடை பாதிப்பால் நேற்று இது 3,500 குவின்டாலாக குறைந்துவிட்டது. இதுவே விலை உயர்வுக்கு காரணம் என தேசிய வேளாண் கூட்டுறவுச் சந்தை கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

டெல்லியில் கிலோ ரூ.80: டெல்லியில் ஆசாத்பூர் மொத்தவிலை சந்தையில் ஒரு கிலோ வெங்காயம் ரூ.48 ஆனதை தொடர்ந்து டெல்லியில் சில்லரை விலையில் கிலோ ரூ.80ஐ எட்டியுள்ளது. சென்னை கோயம்பேடு மார்க்கெட்டுக்கு ஒரு மாதத்துக்கு முன் 70 லாரிகளில் வந்த வெங்காயம், தற்போது வரத்து குறைந்து 40 லாரிகளில் வருகிறது. இதனால், கடந்த மாதத்தில் ரூ.25 முதல் ரூ.30 வரை விற்ற பெல்லாரி (பெரிய வெங்காயம்) தற்போது ரூ.40 முதல் ரூ.50 வரை விற்பனை செய்யப்படுகிறது.

**எண்ணெய் இறக்குமதி வரி உயர்த்த வலியுறுத்தல்**




புதுடெல்லி : கடந்த அக்டோபருடன் முடிந்த எண்ணெய் பருவத்தில் 10 மில்லியன் டன்னுக்கு மேல் தாவர எண்ணெய் இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. இதற்கு முந்தைய ஆண்டு இது 8 மில்லியன் டன்னாக இருந்தது. எனவே, உள்நாட்டில் எண்ணெய் வித்து விவசாயிகளை காக்க சுத்திகரிக்கப்படாத சமையல் எண்ணெய் மீதான இறக்குமதி வரியை 7.5 சதவீதத்தில் இருந்து 25 சதவீதமாகவும், சுத்திகரிக்கப்பட்ட எண்ணெய் மீதான வரியை 15 சதவீதத்தில் இருந்து 45 சதவீதமாகவும் உயர்த்த வேண்டும் என்று எண்ணெய் உற்பத்தியாளர் சங்கம் மத்திய அரசை வலியுறுத்தியுள்ளது. இதற்கு முன்பு கடந்த ஆண்டு டிசம்பரில் எண்ணெய் இறக்குமதி வரி உயர்த்தப்பட்டிருந்தது.

புதுடெல்லி : கடந்த அக்டோபருடன் முடிந்த எண்ணெய் பருவத்தில் 10 மில்லியன் டன்னுக்கு மேல் தாவர எண்ணெய் இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. இதற்கு முந்தைய ஆண்டு இது 8 மில்லியன் டன்னாக இருந்தது. எனவே, உள்நாட்டில் எண்ணெய் வித்து விவசாயிகளை காக்க சுத்திகரிக்கப்படாத சமையல் எண்ணெய் மீதான இறக்குமதி வரியை 7.5 சதவீதத்தில் இருந்து 25 சதவீதமாகவும்,

சுத்திகரிக்கப்பட்ட எண்ணெய் மீதான வரியை 15 சதவீதத்தில் இருந்து 45 சதவீதமாகவும் உயர்த்த வேண்டும் என்று எண்ணெய் உற்பத்தியாளர் சங்கம் மத்திய அரசை வலியுறுத்தியுள்ளது. இதற்கு முன்பு கடந்த ஆண்டு டிசம்பரில் எண்ணெய் இறக்குமதி வரி உயர்த்தப்பட்டிருந்தது.

ஐதராபாத்: சிறு தொழில் செய்பவர்களுக்கு உதவும் வகையில் பேஸ்புக் நிறுவனம் சிறு தொழில் மேம்பாட்டு திட்டத்தை பேஸ்புக் துவக்க உள்ளது. இதை தெலங்கானா தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் கே.டி.ராமராவ் துவக்கி வைக்க உள்ளார். சிறு தொழில் செய்பவர்கள், சிறு வணிகர்கள் தங்கள் பொருட்களை பேஸ்புக் வாயிலாக பிரபலப்படுத்துகின்றனர். இந்தியாவில் சிறுதொழில் செய்யும் 15 கோடிக்கும் மேற்பட்டோர் இந்த உத்தியை கடைப்பிடிக்கின்றனர்.

இவர்களுக்கு உதவும் வகையிலும், டிஜிட்டல் இந்தியா திட்டத்துக்கு கைகோர்க்கும் வகையிலும் இந்த புதிய திட்டம் துவக்கப்படுகிறது என பேஸ்புக் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி பிரிவு தலைவர் ரித்தேஷ் மேத்தா கூறினார். நாடு முழுவதும் 3.8 கோடி சிறுதொழில் முனைவோர் உள்ளனர். இதன்மூலம் 8 கோடிக்கும் மேற்பட்ட மக்கள் வேலைவாய்ப்பு பெறுகின்றனர். எனவே சிறுதொழில் வளர்ச்சிக்கு பேஸ்புக்கின் புதிய திட்டம் உதவும் என அமைச்சர் கே.டி.ராமராவ் தெரிவித்தார்.

**வேலூரில் மீன்கள் வரத்து அதிகரிப்பால் விலை குறைவு**

வேலூர் : வேலூர் மீன் மார்க்கெட்டிற்கு மீன்கள் வரத்து அதிகரித்துள்ளதால் விலை குறைந்துள்ளது. வேலூர் மீன் மார்க்கெட்டிற்கு ஆந்திரா, கர்நாடகா, கேரளா போன்ற மாநிலங்களில் இருந்து மீன்கள் கொண்டுவரப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது. வேலூர் மற்றும் சுற்றுப்புற பகுதிகளில் உள்ள சில்லறை வியாபாரிகள் மார்க்கெட்டிற்கு வந்து மீன்களை வாங்கி சென்று விற்பனை

செய்கின்றனர். கடந்தமாதம் ஆந்திரா, கேரளா மாநிலங்களில் மீன்கள் இனப்பெருக்கத்திற்காக மீன்பிடிக்க தடை விதிக்கப்பட்டிருந்தது. இதனால் கடந்த மாதங்களில் மீன்கள் விலை அதிகரித்து காணப்பட்டது.

இந்நிலையில் தற்போது மீன்பிடிக்க தடை உத்தரவு முடிவுக்கு வந்ததையடுத்து வேலூர் மீன் மார்க்கெட்டிற்கு மீன்கள் வரத்து அதிகரித்துள்ளது. இதனால் கடந்த மாதம் □700க்கு விற்கப்பட்ட வஞ்சிரம், விலை குறைந்து □500க்கும், □300க்கு விற்கப்பட்ட சங்கரா □180, □120க்கும், □700க்கு விற்பனையான வவ்வால் மீன் □500க்கும், □200க்கு விற்பனையான ஐரா □180க்கும், □100க்கு விற்பனையான மத்தி □80க்கும், □600க்கு விற்பனையான சுறா □450க்கும் என மீன்களின் விலை குறைந்து காணப்பட்டது. இதனால் பொதுமக்கள் ஏராளமானோர் ஆர்வத்துடன் மீன்களை வாங்கிச் சென்றனர்.

**இடி, மின்னலுடன் கனமழை நெற்பயிர்களை தண்ணீர் சூழ்ந்தது**

விழுப்புரம் : விழுப்புரம் மாவட்டத்தில் இடி, மின்னலுடன் பெய்த கனமழையால் விவசாயிகள், பொதுமக்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். பல இடங்களில் நெற்பயிர்களை தண்ணீர் சூழ்ந்து உள்ளது. ஆண்டுதோறும் பருவமழையின் அளவு குறைந்து கொண்டே வருகிறது. தென் மாவட்டங்களில் போதிய அளவு மழை பெய்தாலும் வட மாவட்டங்களில் எதிர்பார்த்த அளவிற்கு மழை பெய்யவில்லை. கடும் வறட்சியால் விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளது. குடிநீருக்கும் பஞ்சம் ஏற்படும் நிலை உருவாகி உள்ளது. இதனிடையே அவ்வப்போது மழை பெய்தாலும் போதிய அளவு மழை பெய்யவில்லை.

கடந்த சில நாட்களாகவே வெயிலின் தாக்கம் கடுமையாக இருந்தது.

மாலை நேரங்களில் அனல்காற்றும் வீசத்துவங்கியது. இதனிடையே நேற்று முன்தினம் மாலை கருமேகங்கள் சூழ்ந்து இரவு பத்து மணிமுதல் இடி, மின்னலுடன் மழை பெய்ய துவங்கியது. சுமார் 3 மணி நேரம் இடைவிடாமல் பெய்த மழையால் மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் தண்ணீர் சூழ்ந்தது. விடிய, விடிய பெய்த மழையால் பொதுமக்கள் மகிழ்ச்சியடைந்தனர்.விழுப்புரம் நகரில் தாழ்வான இடங்களில் தண்ணீர் சூழ்ந்து நின்றதால் வாகன ஓட்டிகள் கடும் பாதிப்புக்கு ஆளானார்கள். கீழ்பெரும்பாக்கம் தரைப்பாலம், நகராட்சி மைதானம், பெருந்திட்ட வளாகம், விஜிபி நகர், கமலாநகர் உள்ளிட்ட தாழ்வான இடங்களில் தண்ணீர் தேங்கி நின்றது. மேலும் வாணியம்பாளையம், பில்லூர், ஆனாங்கூர் பகுதியில் பலத்த மழையின் காரணமாக நெற்பயிர்கள் தண்ணீரில் மூழ்கின. இதனை விவசாயிகள் மோட்டார் மூலம் வெளியேற்றினார்கள். நீண்ட நாட்களுக்குப்பிறகு பெய்த பலத்தமழையால் விவசாயிகளும், பொதுமக்களும் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.விழுப்புரம் மாவட்டம் முழுவதும் 240.5 மி.மீட்டர் மழையும், சராசரியாக 24 மி.மீட்டர் மழையும் பெய்துள்ளது. அதிகபட்சமாக திருக்கோவிலூரில் 73 மி.மீட்டர் மழையும், குறைந்தபட்சமாக வானூர், மரக்காணத்தில் 4 மி.மீட்டர் மழையும் பதிவாகியுள்ளது.

**எண்ணைவித்து மரம் வளர்க்க மானியம் வேளாண்துறை தகவல்**

சிவகங்கை, : சிவகங்கை மாவட்டத்தில் வேளாண்மைத்துறையில் எண்ணெய் வித்து மரவளர்ப்பிற்கு மானியம் வழங்கப்பட உள்ளது. இதுகுறித்து மாவட்ட நிர்வாகம் சார்பில் விடுத்துள்ள அறிக்கை: மாவட்ட வேளாண்துறை சார்பில் எண்ணெய் வித்துக்கள் மற்றும் எண்ணெய் பனைக்கான குறு இயக்கத்தின் கீழ் மரவகை எண்ணைய் வித்து பயிர்களான புங்கை மரம் சாகுபடி செய்திட 25 ஹெக்டேர் இலக்கு நிர்ணயிக்கப்பட்டு ரூ.5 லட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. விவசாயிகள்

தாங்கள் சாகுபடி செய்யாமல் தரிசாக விட்டுள்ள நிலங்களில் புங்கை மரக்கன்றுகள் நடலாம். இதற்காக ஒரு ஹெக்டேருக்கு 500 புங்கை மரக்கன்றுகள் நடவேண்டும். மரக்கன்றுகளை விவசாயிகள் வனத்துறையிடமிருந்து விலைக்கு வாங்கிக் கொள்ள வேண்டும்.

இந்த மரக்கன்றுகளுக்கான தொகை மற்றும் நடுவதற்கு குழி தோண்டும் செலவினம், பராமரிப்பு செலவினம் இவற்றிற்காக அரசு மானியமாக ஹெக்டேருக்கு ரூ.20 ஆயிரம் வழங்குகிறது. விவசாயிகள் மரக்கன்றுகள் நட்டு முடித்த பின் இந்த மானியத்தொகை விவசாயிகளின் வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்படும். எனவே, இந்த திட்டத்தில் பயன்பெற விரும்பும் விவசாயிகள் தங்களுடைய வட்டாரங்களில் உள்ள வேளாண் உதவி இயக்குனரை அணுகி பெயர்களை பதிவு செய்துகொள்ள வேண்டும். இத்திட்டத்தில் அனைத்து விவசாயிகளும் பயன்பெறலாம். இத்துடன் மரக்கன்றுகள் நட்ட அடுத்த ஆண்டில் ஊடுபயிர் சாகுபடி செய்திட ஹெக்டேருக்கு ரூ. ஆயிரம் மானியமாக வழங்கப்படும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**அரவக்குறிச்சி அருகே சிறப்பு கால்நடை பாதுகாப்பு முகாம்**

அரவக்குறிச்சி : அரவக்குறிச்சி அருகேயுள்ள தம்மநாகக்கன்பட்டி கிராமத்தில் வெள்ளகவுண்டன்பட்டி கால்நடை மருந்தகம் சார்பில் சிறப்பு கால்நடை பாதுகாப்பு முகாம் நடைபெற்றது. இம்முகாமில் சிறந்த கலப்பின கிடேரி கன்றுகளுக்கு கால்நடை பராமரிப்புத்துறை மண்டல இணை இயக்குநர் டாக்டர் ராமநாதன் ஊக்கப்பரிசு வழங்கினார். முகாமை கால்நடை பராமரிப்புத்துறை மண்டல இணை இயக்குநர் டாக்டர் ராமநாதன் துவக்கி வைத்தார்.முகாமில் வெள்ளாடுகள் மற்றும் செம்மறி ஆடுகளுக்கு நோய் தடுப்பூசி போடப்பட்டது. பசு மற்றும் எருமைகளுக்கு கோமாரி நோய்க்கு தடுப்பூசி போடப்பட்டது. மேலும்

குடற்புழு நீக்கல், கருவூட்டல், மலடு நீக்கல், சினை பரிசோதனை உள்ளிட்ட சிகிச்சைகள் இலவசமாக அளிக்கப்பட்டது. வெள்ளகவுண்டன்பட்டி கால்நடை மருந்தக டாக்டர் பிரதிபா, கால்நடை ஆய்வாளர் சக்திவேல், கால்நடை பராமரிப்பு உதவியாளர்கள் சரஸ்வதி, விஜயசாந்தி உள்ளிட்ட கால்நடை மருத்துவக் குழுவினர் சிகிச்சையளித்தனர். இம்முகாமில் 840 கால்நடைகளுக்கு இலவச சிகிச்சையளிக்கப்பட்டது. முகாமில் சுற்றுப் பகுதி கிராமத்தைச் சேர்ந்த விவசாயிகள் தங்கள் கால்நடைகளுடன் கலந்து கொண்டனர்.

**கொள்முதல் நிலையங்களில் 50 மூட்டைகளாக வாங்க கோரிக்கை**

தரங்கம்பாடி : விவசாயிகளுக்கு ஏற்படும் இழப்பீட்டை தவிர்க்க அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் 50 கிலோ மூட்டைகளாக வாங்க வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். இதுகுறித்து வடகட்டளை கிராமத்தை சேர்ந்த விவசாயி பசுபதி கூறியதாவது: தமிழக அரசு குறுவை நெல் கொள்முதலுக்காக நேரடி கொள்முதல் நிலையங்களை திறந்துள்ளது. அங்கு விவசாயிகளிடம் 40 கிலோ மூட்டைகளாக எடை போட்டு வாங்குகிறார்கள். மேலும் சாக்குக்காக 800 கிராம் நெல் பிடித்தம் செய்கிறார்கள். ஒரு விவசாயியிடம் 40 கிலோ மற்றும் 800 கிராம் மட்டுமே வாங்க வேண்டும். ஆனால் அதற்கு மாறாக மூட்டைக்கு 42 கிலோ வைத்து எடுக்கிறார்கள். இதனால் விவசாயிக்கு ஒரு மூட்டைக்கு 1 கிலோ 200 கிராம் நெல்லுக்கு பணம் கிடைக்காமல் நஷ்டமாகிறது. இதை தவிர்க்கவும் விவசாயிகளுக்கு நெல்லுக்குரிய பணம் கிடைத்திடவும் 50 கிலோ மூட்டைகளாக எடை போட்டு வாங்க வேண்டும். அப்படி வாங்கினால் 2 மூட்டை 1 குவிண்டால் ஆகி விடும். விவசாயிகளுக்கு எளிதாக கணக்கிட்டு பணம் பெற முடியும். மூட்டைக்கு 1 கிலோ 200 கிராம் இழப்பும் இருக்காது.

எனவே அரசு விவசாயிகளின் நலன் கருதி இதை நடைமுறைபடுத்த வேண்டும். மேலும் நெல் கொள்முதல் நிலையங்களில் மூட்டைக்கு 30 ரூபாய் பிடித்து கொண்டு தான் பணம் கொடுக்கிறார்கள். விவசாயிகளுக்கு ஏற்படும் இந்த இழப்பையும் ஏற்படாமல் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று விவசாயி பசுபதி தெரிவித்தார்.

**மேட்டூர்நீர் மட்டம் குறைந்து வருவதால் தமிழகத்திற்கு உரிய காவிரிநீரை பெற்றுத்தர அரசுக்கு கோரிக்கை**

வலங்கைமான் : டெல்டா மாவட்டங்களில் மூன்று போக சாகுபடி மேற்கொண்ட விவசாயிகள் தற்போது ஒரு போக சாகுபடி மேற்கொள்ள வேண்டிய சூழ்நிலை உள்ளது. கடந்த 9ம்தேதி பாசனத்திற்கு மேட்டூர் அணை திறக்கப்பட்டபோது 96.51 அடியாக மேட்டூர் அணை நீர்மட்டம் இருந்தது. தற்போது காவிரி நீர்பிடிப்பு பகுதியில் மழையின் அளவு குறைந்துள்ளாதால் அணைக்கு வரும் நீரின் அளவும் குறைந்து உள்ளது. சம்பா சாகுபடிக்கு முழுமையாக பாசன ஆறுகள் மற்றும் வாய்க்கால்களில் தண்ணீர்வர இம்மாதம் 25தேதியை கடந்துவிடும். இம்மாத இறுதியிலேயே விதைவிடும் பணி 80 சதவீதத்தை எட்டும். சம்பா சாகுபடிக்கு ஜனவரி மாத இறுதிவரை தண்ணீர் தேவைப்படும். இந்நிலையில் வடகிழக்கு பருவமழை குறைந்த நாட்களில் அதிக அளவு பெய்யாமல் அதிக நாட்களில் குறைந்த அளவு பெய்தால் மட்டுமே சம்பா சாகுபடிக்கு பலன் அளிக்கும். டெல்டா மாவட்டங்களில் ஆடிமாதம் இயல்பாக வீசக்கூடிய காற்று இவ்வாண்டு வீசவில்லை. ஆகையால் தென்கிழக்கு பருவமழை குறைந்ததோடு வடகிழக்கு பருவமழையும் குறையும் என விவசாயிகள் அச்சமடைந்துள்ளனர். இதனை கருத்தில்கொண்டு கர்நாடாகாவிடமிருந்து உரிய நீரை காலதாமதமின்றி பெறுவதற்கு அனைத்து முயற்சிகளையும் அரசுகள் மேற்கொள்ள வேண்டும். அப்போது தான் எவ்வித தயக்கமின்றி வேளாண்மை பணிகளை துவங்க இயலும். அதிமுக அரசு பொறுப்பேற்று 2011ம்

ஆண்டு ஜூன்மாதம் 6ம்தேதி மேட்டூர் அணை பாசனத்திற்கு திறக்கப்பட்டது. அதனையடுத்து 2012ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 17ம்தேதியும், 2013ம் ஆண்டு ஜூலை மாதம் 2ம்தேதியும், 2014ம் ஆண்டு ஆகஸ்டு 10ம் தேதியும், இவ்வாண்டு ஆகஸ்ட் 9ம்தேதி தண்ணீர் பாசனத்திற்கு திறந்து விடப்பட்டுள்ளது. கடந்த சில ஆண்டுகளாக மேட்டூர் அணை உரிய நேரத்தில் திறக்கப்படவில்லை. மேலும் தமிழக அரசு சம்பா சாகுபடிக்கான நிர்ணயிக்கப்பட்டுள்ள இலக்கினை அடைய விவசாயிகளுக்கு தேவையான விதைகள் யூரியா, டிஏபி உள்ளிட்ட உரங்கள், பூச்சிமருந்துகள் ஆகியவற்றை தட்டுப்பாடின்றி வழங்க வேண்டும். தேவையான உரங்களை முன்கூட்டியே இருப்பு வைத்து விவசாயிகளுக்கு வழங்க வேண்டும். கடந்த ஆண்டு டெல்டா மாவட்டங்களில் யூரியாவிற்கு வரலாறு காணாத தட்டுப்பாடு ஏற்பட்டது. அரசு உரிய நேரத்தில் யூரியாவை வழங்காமல் காலம் தாழ்த்தியே வழங்கியது. மேலும் விவசாயிகள் யூரியா வாங்குவதற்கு குடும்ப அட்டையுடன் நீண்ட வரிசையில் காத்திருக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. நடப்பாண்டு சம்பா சாகுபடி பணிகள் தேக்கமின்றி இலக்கை நோக்கி செல்ல தேவையான உரங்கள், விதைகள், தட்டுப்பாடின்றி வழங்கவும், தமிழகத்திற்கு தேவையான தண்ணீரை கர்நாடாகாவிடமிருந்து பெற்றுத்தரவும் அரசு முயற்சி செய்தால் மட்டுமே இலக்கு சாத்தியமாகும்.

**போலி உரங்களை வாங்காதீர்! விவசாயிகளுக்கு அறிவுரை**

அருப்புக்கோட்டை, : அருப்புக்கோட்டை பகுதியில் தற்போது கோடை உழவு செய்யப்பட்டு விவசாயிகள் சாகுபடிக்கு தயாராக உள்ளனர். இந்நிலையில் சில கிராமங்களில் ராசயன உரங்களை குறைந்தவிலைக்கு விவசாயிகளுக்கு விநியோகம் செய்வதாக கூறி போலியான உரங்களை விற்பதாக புகார் வருகிறது. எனவே, விவசாயிகள் போலியான உரங்களை வாங்கவேண்டாம் என்றும் போலி உரங்களை விற்பனை

செய்வோர் நேரடியாக தங்களை அணுகினால் வேளாண் உதவி இயக்குநர், அருப்புக்கோட்டை 9443854725 என்ற எண்ணிலும் உர ஆய்வாளர் 9094040455 என்ற எண்ணிலும் தொடர்பு கொள்ளவேண்டும். மேலும் அருப்புக்கோட்டை வேளாண் விரிவாக்க மையத்தில் பாசிப்பயறு மற்றும் உளுந்து விதைகள் ரூ.25 மானியத்தில் விநியோகம் செய்யப்படுகிறது. தேவைப்படும் விவசாயிகள் வேளாண் விரிவாக்க மையத்தைத் தொடர்பு கொள்ளவேண்டும் என வேளாண் உதவி இயக்குநர் மணிசேகரன் தெரிவித்துள்ளார்.

**பருத்தி உற்பத்தியாளர்களுக்கு 30% மானியம் வழங்க வேண்டும்**

ஈரோடு : டாக்டர் எம்.எஸ்.சுவாமிநாதன் கமிட்டி பரிந்துரையின்படி பருத்தி உற்பத்தியாளர்களுக்கு 30 சதவீதம் மானியம் வழங்க வேண்டும் என்று தொழில் வணிக சங்க கூட்டமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது. ஈரோடு மாவட்ட அனைத்து தொழில் வணிக சங்கங்களின் கூட்டமைப்பு தலைவர் சிவநேசன், பொதுச்செயலாளர் ராஜமாணிக்கம் ஆகியோர் கோரிக்கைகள் தொடர்பாக மத்திய ஜவுளித்துறை அமைச்சருக்கு மனு அனுப்பியுள்ளனர். அந்த மனுவில் தெரிவித்துள்ளதாவது: இந்திய அளவில் வேளாண்மைக்கு அடுத்த படியாக பிரதான தொழிலாக இருந்து வரும் ஜவுளிதொழில் உலகமயமாக்கலுக்கு பிறகு பல்வேறு சிக்கல்களில் தவித்து வருகிறது. நாட்டில் 355 மில்லியன் கிலோ நூல் உற்பத்தி செய்யப்பட்டு ஏற்றுமதி, உள்நாட்டு தேவைக்கு போக மீதமுள்ள 45 மில்லியன் கிலோ நூல் தேக்கமடைந்துள்ளது. மத்திய அரசின் தெளிவான கொள்கை அமல்படுத்தப்படாதததால் இதுபோன்ற நிலை ஏற்பட்டுள்ளது.

ஜவுளித்துறையில் நவீன இயந்திரங்கள், திறமையான வேலையாட்கள், அதிக பருத்தி மற்றும் நூல் உற்பத்தி, நல்ல தரம் ஆகியன இருந்தும் அந்நிய நாடுகளின் கொள்கை, மத்திய அரசின் கவனமின்மை போன்ற காரணங்களால் கடந்த 2 ஆண்டுகளாக நெருக்கடியில் உள்ளது. ஜவுளி

தொழிலை அழிவில் இருந்து காக்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். நாடு முழுவதும் பருத்தி, நூல் வங்கிகள் திறக்கப்பட வேண்டும். டாக்டர் எம்.எஸ்.சுவாமிநாதன் கமிட்டி பரிந்துரையின்படி பருத்தி உற்பத்தியாளர்களுக்கு 30 சதவீதம் மானியம் வழங்கி விலையை சமன் செய்ய வேண்டும். வங்கியில் பெற்ற கடன்கள் திருப்பி கட்ட 2 ஆண்டு காலம் அவகாசம் தர வேண்டும். பஞ்சு மீதான இறக்குமதி வரியை குறைக்க வேண்டும். ஜி.எஸ்.டி. வரி கொண்டு வந்து ஜவுளி தொழில் சார்ந்த அனைத்துபொருட்களும் விலக்கப்பட்ட பட்டியலில் இடம் பெற வேண்டும். தமிழக அரசு மாசுக்கட்டுப்பாடு விதிகளுக்குட்பட்டு கடற்கரை பகுதிகளில் சாய, சலவை, துணி பதனிடும் ஆலைகள் துவக்க அனுமதி அளிக்க வேண்டும். செயற்கை இழை மீதான இறக்குமதி வரியை 5 சதவீதமாக குறைக்க வேண்டும்.ஜவுளி மூலப்பொருட்களின் மீதான இறக்குமதி வரியை 2 சதவீதமாக குறைக்கவும், கோன் நூல்கள் மீதான 5 சதவீத மதிப்பு கூடுதல்வரியை குறைக்க வேண்டும். ஏற்றுமதிக்கான ஊக்கத்தொகையை அதிகரித்து கழிவு பஞ்சு மீதான ஒழுங்குமுறை விற்பனை வரியை நீக்க வேண்டும். இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

**சோயாபீன்ஸ் சாகுபடியில் விவசாயிகள் ஆர்வம் வறட்சி௵ய தாங்கி வளரும்**

திருவிடைமருதூர் : திருவிடைமருதூர் பகுதியில் வறட்சியை தாங்கி குறைந்த பாசனநீரை கொண்டு வளரும் சோயாபீன்ஸ் சாகுபடியில் விவசாயிகள் ஆர்வமுடன் ஈடுபட்டுள்ளனர். திருவிடைமருதூர் அடுத்த திருப்பனந்தாள், பந்தநல்லூர், கீழகாட்டூர், அணைக்கரை, நெய்குப்பை உள்ளிட்ட பல்வேறு கிராம பகுதிகளில் வறட்சியை தாங்கி குறைந்த பாசன நீரை கொண்டு அதிக லாபம் தரக்கூடிய சோயாபீன்ஸை ஆயிரகணக்கான ஏக்கரில் சாகுபடி செய்ய துவங்கியுள்ளனர். இதுகுறித்து

விவசாயிகள் கூறுகையில், பயிர் செய்யக்கூடிய விளைநிலத்தை டிராக்டரை கொண்டு நன்றாக உழுது பின்னர் பாத்திகட்டி சோயாபீன்ஸ் விதையை வேலையாட்களை கொண்டு விதைத்திடுவோம். குறைந்த நாட்களில் பலன் தரக்கூடிய (90 நாட்கள்) இந்த சோயாபீன்ஸை விதைத்தது முதல் 10 நாட்களில் முளைக்காத இடங்களில் பழுது விதையிட்டு தொடர்ந்து பயிரின் வளர்ச்சிக்கு தகுந்தவாறு தேவையான அளவுக்கு உரம் இடுவோம். பூச்சி தாக்குதல் மற்றும் நோயை கட்டுப்படுத்த பூச்சி, பூஞ்சான கொல்லி மருந்தை கைதெளிப்பான் கொண்டு தெளித்து கட்டுப்படுத்துவோம். வெப்பத்துக்கு தகுந்தவாறு 8 முதல் 10 முறை பாசனநீர் பாய்ச்சி பயிரின் வளர்ச்சியை நன்றாக கொண்டு வருவோம். பின்னர் 40வது நாட்களில் பூ பூத்து காய்வைக்க தொடங்கும். 90 நாட்களில் சோயாபீன்ஸை அறுவடை செய்வோம். ஏக்கருக்கு 10 குவின்டால் முதல் 15 குவின்டால் வரை கிடைக்கும். ரூ.25 ஆயிரம் வரை பராமரிப்பு செலவாகி, செலவுபோக ரூ.40 ஆயிரம் முதல் ரூ.50 ஆயிரம் வரை வருமான கிடைக்கும். எனவே திருப்பனந்தாள் மற்றும் சுற்றுப்புற பகுதிகளில் மற்ற பயிர்களை குறைத்து சோயான்பீன்ஸை ஆர்வத்துடன் விவசாயிகள் சாகுபடி செய்ய துவங்கியுள்ளனர் என்றனர்.